JL
Y 31m N27
N27.2.1
223466

Regd. No. M. 1930 ஓம் வந்தேமாதரம். Annual Subscription Rs. 2.

1

# கிராமானுகூலன்

# GRAMANUKOOLAN.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]

**KUMBAKONAM.**

புத்தகம் 2 } 1927ஹு ஆகஸ்டு—செப்டம்பர் பிரபவஹு ஆவணி } ஸஞ்சிகை 1

**சந்தா விபரம்.**

| | | |
|---|---|---|
| உள்நாட்டுக்கு வருட சந்தா [தபால்கூலி உள்பட] | ... ரூ | 2 0 0 |
| வெளிநாடுகளுக்கு ,, ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி ,, ,, | ,, | 0 3 0 |

விஷய சூசிகை.


| | பக்கம் |
|---|---|
| 1. நமது பத்திரிகை (பத்திராதிபர்) | 1 |
| 2. மகாத்மாகாந்தியின் விஜயம் ,, | 2 |
| 3. நிலவரிக்கோடுமை ,, .... | 3 |
| 4. கிராமாந்திரங்களில் முனிசிபல் அதர்மவரி ,, .... | 4 |
| 5. கிராம சுகாதாரமும் வைத்தியவசதியும் (ஸ்ரீமான் ஜி. எம். இராமஸ்வாமி ஐயர்) ... | 5 |
| 6. கிராம உத்தியோகஸ்தர்கள் ,, .... | 7 |
| 7. நூதன முறையில் ஏற்படுத்திய கிராமம் ,, .... | 8 |
| 8. தலைவர் கருத்துக்கள் (தண்டமிழ்த்தொண்டர்) | 185 |
| 9. இந்திய ஆட்சிமுறை (ஓர் இந்தியமாணவர்) .... | 186 |
| 10. ஆரம்பக்கல்வியின் அபிவிர்த்தி (ஓர் ஆரம்பஆசிரியர்) .... | 189 |
| 11. ஜாதகமும் அதன் பிரயோஜனமும் ஸ்ரீமான் R. சுப்பிரமணிய தெய்வக்ஞர்) .... | 191 |
| 12. தென் இந்தியக்கோயில்கள் (ஸ்ரீமான் பி. வி ஜெகதீசய்யர்) .... | 193 |
| 13. மதுகரமானினி (ஓர் நாடகம்) (ஸ்ரீமான் S. S. இராஜகோபால அய்யங்கார் B.A., B.L.,) | 194 |
| 14. பாங்குகளின் முறையும் அவைகளின் உபயோகமும் (ஒரு பாங்க் காஷியர்) .... | 197 |
| 15. ராணா பிரதாப சிம்மன் அல்லது ரஜபுத்திரதேச பக்தி (ஸ்ரீமான் எஸ். மாகாலிங்கசர்மா) ... | 199 |
| 16. விளம்பரங்கள் | 201-204 |


**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| பக்கம் 1க்கு [2-கலம்] மீ 1க்கு ரூ. 10 | காலம் ½க்கு மீ 1க்கு ரூ 2 8 0 |
| பக்கம் ½க்கு [1-கலம்] ,, 5 | இஞ்ச் 1க்கு ,, அணா 8 |

விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

**N.** ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 6-FEB 1928 MADRAS

ஆதரணைக் கர்த்தர்.

ஸ்ரீமான் N. வெங்கட்டராமஐயர் அவர்கள்.

# கிராமானுகூலன்.

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரு. | 50 0 0 |
| அபிமானிகளுக்கு ,, | .... | 15 0 0 |
| ஜீவிய சந்தா | .... | 25 0 0 |
| வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன். | ... | 2 0 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினாங்கு, மோரீஸ், நேட்டால்) | .... | 2 8 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

## நமது ஜில்லாவாசிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

—— : x : ——

நன்னிலம் தாலூகா மிராசுதார் சங்க காரியதரிசியும், நன்னிலம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும் 188 செம்மங்குடி கிராம பஞ்சாயத்து பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் S. R. சுப்பிரமணிய அய்யர் எழுதுவதாவது:—

ஸ்ரீமான் ஆபத்ஸகாய அய்யரால் நடத்தப்படும் "கிராமானுகூலன்" பத்திரிகையானது கிராமங்களில் மிராசுதார்களின் நன்மையை நாடியே உழைத்துவருமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கிராமங்களில் மிராசுதார்கள் சம்மந்தமாகவும், சுகாதாரம், ஆரம்பக்கல்வி, ரோட்மராமத்து, புஸ்தகசாலை, வாசகசாலை இவைகள் சம்மந்தமாக உழைக்கக்கூடிய 1920வருஷத்திய 15வது ஆக்டான கிராமபஞ்சாயத்தின் அவசியத்தைப்பற்றியும், ராஜிய முறைப்போக்கைப்பற்றியும், கிராமானுகூலன் முன்னணியினின்று உழைக்குமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆதலால் நமது ஜில்லாவாசிகள் எல்லோரும் தவறாமல் கிராமானுகூலனுக்கு சந்தாதாராக சேருவதுடன் கிராமானுகூலன் தீவிரமாக உழைப்பதற்கு வேண்டிய நன்கொடையளித்து அப்பத்திரிகையை மிராசுதாரர்களாகிய எல்லோரும் ஆதரிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரிஜிஸ்டர் நெ. M. 1930]　　வந்தேமாதரம்.　　[வருட சந்தா ரூபா 2—0—0

# கிராமானுகூலன்.

[ ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை. ]

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
223466
சென்னை-600 008

'ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்"—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை.

புத்தகம் 2 } பிரபவ௵ ஆவணி௴ { ஸஞ்சிகை 1

## நமது பத்திரிகை.

:x:

தமிழ் நாட்டில் அவதரிக்கும் அநேக தமிழ் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட பாலாரிஷ்டம் என்ற வியாதியானது நமது கிராமானுகூலனையும் விட்டு விடவில்லை. சென்ற மூன்றுவருஷகாலமாய் நமது கிராமானுகூலன் வெளிவரமுடியாது போய்விட்டதற்கு பலவித காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமாய் பத்திராதிபருக்கு நேரிட்ட பெருங்கஷ்டங்களும் அவர் ஜீவேஜியற்றவராகி விட்டதும் முக்கியமாகும். சந்தாநேயர்களும் தங்கள் சந்தாதுகையை முன்பணமாக கொடுத்து உதவி புரிந்தாலொழிய பத்திரிகை சரிவர நடைபெறுவது சிரமசாத்தியமென்பதை அறியாதவர்களல்ல. முதலாவது ஆண்டின் சந்தா துகையை செலுத்தியிருப்பவர்கள் மிகச் சிலர்களே. பலர் தங்கள் சந்தா துகையை முன்னடி அனுப்பி வைக்காததாலே பணக்கஷ்டத்தினால் பத்திரிகை தவக்கப்பட்டுவிட்டது. இனியாவது ஆலசியமாயிராமல் சந்தா நேயர்கள் தங்கள் சந்தா துகையை முன்பணமாக இந்த இதழ் கிடைத்தவுடனே அனுப்பிவைத்து பத்திரிகைதவறாது நடந்து வரும்படி உதவி புரிவார்களென்று நிச்சயமாய் நம்பி ஆரம்பித்துவிட்டோம். பத்திரிகையின் சந்தாவாகிய சொற்ப துகையைக்கொண்டே நடத்திவருவது முடியாதகாரியமென்பதை அனுபவத்தில் அறிந்து கொண்டிருக்கிறோம் அதன்பேரில் பத்திரிகாபிமானிகள் நன்கொடைகள் அளித்தும், அபிமானிகளாகவும் போஷகர்களாகவும் சேர்ந்தும் பெருந்தவி செய்து நமது கிராமானுகூலனை ஆதரித்துவரவேணுமாய் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். இது விஷயத்தில் நமது சகோதர கிராம உத்தியோகஸ்தர்கள் பேருதவி புரிவார்களென்றும் நம்பியிருக்கிறோம். கிராமானுகூலன் தனது பழைய கொள்கையையனுசரித்தே கிராமவிஷயங்களை கிராம புனருத்தாரணத்திற்கேற்ற விதமாய் ஆதரித்துவரும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.


பத்திராதிபருக்கு ஏற்பட்ட கஷ்ட காலத்தில மருதாந்தநல்லூரில் தர்மப்பிரபுவாகிய ஸ்ரீமான் நாராயணசாமிஅய்யர் அவர்களுக்கும், தர்மமே உருவாய்க் கொண்டு குடும்ப நிர்வாகத் திறமையுடன் சிறந்து விளங்கும் மாதுஸ்ரீ அனந்தலெக்ஷ்மி அம்மாளுக்கும் அருந்தவப்புதல்வராய் அவதரித்து தர்மபிரபுவாயும் சதாசாரபுருஷருமும் புண்ணியசீலராயும் விளங்கும் பாரி மிராசுதாரும் தாலூகா போர்டு மெம்பருமான ஸ்ரீமான் என். வெங்கிட்டராமய்யர் அவர்கள் பத்திராதிபரின் குடும்பத்தை ஆதரிக்க ஏற்றுக்கொண்டு மூன்றுவருஷகாலமாய் அன்புடனும் அனுதாபத்துடனும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். அய்யர் அவர்களும் தாராள மனதுபடைத்த அவர்களுடைய

அனைவர்களும் கட்டுரைகளும் போனபின்னால் நமது பத்திராதிபர் தான் ஜெயிலேற்றவர் என்பதையே அடியுடன் மறந்துவிடும்படி ஏற்பட்டிருக்கிறது.

இவ்வளவுதூரம் ஆதரித்து வருவது போதாதென்று கருதி அவர்கள் பெருந்தன்மையுடன் இந்த கிராமானுகூலன் பத்திரிகையையும் தாராளமாய் பொருளுதவி புரிந்து ஆதரிக்க முன்வந்துள்ளார்கள். அவர்களுடைய பேருதவியினாலேயே நாம் மறுபடியும் பத்திரிகையை ஆரம்பிக்க முன்வந்துள்ளோம். அவர்கள் குடும்பத்திற்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிராமானுகூலன் இனி மாதந்தவறாது வெளிவந்து அனுகூலமான காரியங்களை செய்யும்படி சர்வ வல்லமையுள்ள கடவுள் அனுக்கிரஹம் புரிவாராக.

ஓம் தத் ஸத்.



# மகாத்மா காந்தியின் விஜயம்.

மகாத்மாஜீ சிறையினின்று விடுதலையான சந்தோஷ சமாசாரத்துடன் நமது கிராமானுகூலன் முதல் இதழ் வெளிவந்தது இப்பொழுது வியாதியினின்று விடுதலையாகி நமது கும்பகோணத்துக்கு விஜயஞ்செய்யும் நல்வரவு சமாசாரத்துடன் இவ்விதழ் முதன்மையாக வெளிவருகிறது இதுவும் நல்ல சுபசகுனமேயாகும். மகாத்மாஜீ அவர்களை அன்புடன் நல்வரவேற்கிறோம்!

மகாத்மாஜீயின் விஜயத்தினால் தென்னாட்டில் கதர் இயக்கம் அதிகமாய் வியாபிக்க இடமுண்டாகிவிட்டது. ஏழைமுதல் பணக்காரர்கள் உள்பட சகலமானவர்களும் கதர் இயக்கத்துக்கு தாராளமாய் பொருளுதவிசெய்து தென்னாட்டிற்கு ஒரு கவுரவத்தை உண்டுபண்ணி விட்டார்கள். அதே ஊக்கமானது தளராமல் கதர் அபிவிர்த்தி விஷயத்தில் செலுத்தப்பட வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். மகாத்மாஜீயின் அபிப்பிராயப்படி கதர் இயக்கந்தான் உண்மையாய் இந்தியாவுக்கு சுயராஜ்யத்தை அளிக்க வல்லதாகுமென்று நம்புகிறோம். ஆகையால் ஒவ்வொரு கிராமத்திலும் குடும்பத்தவராது குறைந்தபக்ஷம் ஒரு கைராட்டினமாவது சுற்றும்படியும், பிரதி கிராமத்திலும் இரண்டொரு கைத்தறிகளாவது கதர் வஸ்திரம் நெய்யும்படியும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். அந்தந்த கிராமத்துக்கு தேவையான பருத்தியையும் அங்கங்கேயே விளைவித்துக்கொள்வதுதான் விரும்பத்தக்கதாகும். அதற்கு தாலூகா காங்கிரஸ் கமிட்டியார் தகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு உழைக்கவேணுமாய்க் கோருகிறோம்.

மகாத்மாஜீக்கு தீர்க்காயுளும் திடசரீரமும் தந்தருளவேணுமாய் கடவுளை பிரார்த்திக்கிறோம்.

---

“ நல்லாரைக் காண்பதுவும் நன்றே—நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்று ”



# நிலவரிக் கொடுமை.

சென்னைராஜதானியில் நிலவரியானது மற்றராஜதானிகளைவிட இருமடங்கு அதிகமாயிருக்கிறது. அதிலும் டெல்டா பிரதேசங்களென்று வழங்குகிற ஆற்றுப்பாசனமுள்ள ஜில்லாக்களில் ஏற்படுத்தியிருக்கும் தாவாரிதீர்வையானது தாங்கக்கூடியதாயில்லை தவிரவும் ரீசெட்டில்மெண்டு என்று சொல்லி 30 வருஷத்திற் கொருமுறை தீர்வையை உயர்த்திக் கொண்டே வருகிறார்கள். 30-வருஷத்திற்கு முன் இருந்தநிலவளம் இப்பொழுது கிடையாது நிலத்தில் எருசக்து குறைந்து கொண்டே வருவதால் விளைவு கம்மியாய்க்கொண்டேவருகிறது. செயற்கை எரு போட்டாலொழிய விளையாதென்ற ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறது. எருவுக்கு வேண்டியிருக்கும் எலும்பு புண்ணாக்கு முதலிய வஸ்துக்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவிடுகிறது. சாகுபடிச் செலவோ 30-வருஷத்திற்கு முந்தியிருந்ததைவிட மூன்று மடங்குக்குமேல் உயர்ந்து விட்டது. விவசாயத்துக்குவேண்டிய கால்நடைகளின் விலையும் அப்படியே உயர்ந்து விட்டது. கால்நடை களின் மரணமும் அதிகரித்துவிட்டது. பலிதத்திலும் சாகுபடிச்செலவு அதிகரித்தும் விளைவு கம்மியாகவும் போய்விட்டது. ரீசெட்டில்மெண்டு செய்கையில் வரியை உயர்த்தவேண்டுமென்ற ஒரே கொள்கையுடன் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு வேண்டிய ஆதாரங்களை சொல்லிக்கொண்டு கிரமமான விஷயங்களை கவனிக்காமல் வரி உயர்த்தப்பட்டு வருகிறது. நத்தம்ஜாரியென்று நீண்டகாலமாய் யாதொரு தீர்வையும் விதிக்கப்படாமல் ஜாரி என்ற அர்த்தத்தின்படி அனுபவித்துவந்த வீட்டின்புழக்கடையில் வீடுகளுக்கு அத்தியாவசியமான மூங்கில்பூவரசு முதலியவைகளிருந்தாலும் அதற்கும் தீர்வை விதிக்கப்பட்டு விடுகிறது.

மிராசுதார்களோ கிஸ்தியானது ஒன்றுக்கு இரண்டாகவும் சாகுபடிச்செலவு ஒன்றுக்கு மூன்றாகவும் உயர்ந்துவிட்ட ஸ்திதியில் வரும்படியைக் கொண்டு கிஸ்தியை செலுத்தமுடியாமல் கடன் பட்டுக்கொண்டே வருகிறார்கள். வேறு கைத்தொழிலுமில்லாத ஸ்திதியில் பட்ட கடனை அடைக்கமுடியாமல் வட்டி யேறிக்கொண்டே யிருக்க மேலும் மேலும் கடன் வாங்கவேண்டிய ஸ்திதியிலேயே இருக்கிறார்கள். இந்தக் கடன்கள் நிவர்த்தியாவதற்கு நிலத்தை விற்றாலொழிய வேறு மார்க்கமில்லை. ஆகவே நிலவரியானது மிராசுதார்கள் தாங்கமுடியாததாகவும் அவர்களுடைய நிலத்தையே இழக்கும்படி செய்யக்கூடியதுமான கொடுமையுள்ளதாயிருக்கிறது.

நிலவரி நிர்ணயத்துக்கு சட்டமியற்றவேண்டுமென்று பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டியார் கூறி பல வருஷங்களாகியும் கெவர்ன்மெண்டார் அது விஷயத்தை தள்ளி வைத்துக்கொண்டே வருகிறார்கள். கெவர்ன்மெண்டாருக்கு முக்கிய ஆதாரம் நிலச்சுவான்தார்களும், நிலவரியுமே. நிலச்சுவான்தார்களை அடியுடன் அழித்துவிடக்கூடிய ஸ்திதியிலிருக்கும் நிலவரிக்கொடுமையை தணிக்கவேண்டியது காருண்ய கெவர்ன்மெண்டாரின் முக்கிய கடமையாகும்.

ஆகையால் கப்பவஜாத்துகை 348-லக்ஷம் ரூபாயையும் நிலவரியை குறைக்கவேண்டிய விஷயத்திற்கே உபயோகப்படுத்தவேண்டியது அவசியமாகவும் நியாயமாகவுமிருக்கிறது இந்த மிச்சத் தொகையும் நிலவரி வருமானத்திலிருந்தே மிஞ்சிய தொகையாதுமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது இந்த விஷயத்தைப்பற்றி சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் ஏ ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின்பேரில் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் சிறிது விழித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லா ஜில்லாக்களிலுமுள்ள ரயத்துவாரி மிராசுதார்கள் கட்டுப்பாட்டுடன் தகுந்தபடி கிளர்ச்சி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## விக்ஞாபனம்.

முதல் புத்தகத்திற்கு பிரிண்டு செய்யப்பட்டு பிரசுரிக்கப்படாமல் தங்கிவிட்ட 185-முதல் 204-வரையிலுள்ள பக்கங்களை சேர்த்து இந்த இதழ் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ப-ர்.

## கிராமாந்திரங்களில் முனிசிபல் அதர்மவரி.

—: x :—

முனிசிபல் எல்லையிலிருந்து 3-மைல் வரையிலுள்ள கிராமங்களில் வசிப்பவர்களுக்கு முனிசிபாலிட்டியாரின் வரி உபத்திரவம் தாங்கக்கூடியதாயில்லை. வரிவிதிக்கும் தர்மமானது வரி செலுத்துவோர்களுக்கு நன்மைசெய்யும்பொருட்டே ஏற்பட்டதாகும். முனிசிபல் எல்லைக்குள் வசிப்பவர்கள் செலுத்தும் வரிகளுக்கு பலவித சௌகரியங்களை அவர்கள் அடைந்து வருகிறார்கள். எல்லைக்கு வெளியில் வசிப்பவர்களுக்கு யாதொரு சௌகரியமும் செய்துகொடுக்கப்படவில்லை செய்து கொடுக்கவும் முடியாது அப்படிக்கிருக்க கும்பகோணம் முனிசிபாலிட்டியார் கனம் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயனுக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தில் தாங்கள் ஏராளமான சுகாதார உத்தியோகஸ்தர்களை வைத்துக்கொண்டிருப்பதாயும் தொத்து வியாதிகள் வராமல் பாதுகாக்கக்கூடுமென்றும், அதனால் தங்களுக்கு முனிசிபல் ஆக்ட் 249-வது செக்ஷன்படி ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தை கும்பகோணம் தாலுக்கா போர்டாருடன் ஏற்பட்டிருக்கும் தகராரைக்கொண்டு ரத்து செய்து விடக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டார்கள். கும்பகோணம் தாலுக்கா போர்டாரும் தங்கள் எல்லைக்குள் முனிசிபாலிட்டியார் அக்கிரமமாக வரி வசூல் செய்வது நியாயவிரோதமென்றும் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற சானிடரிஇன்ஸ்பெக்டர்களைவிட அதிக திறமை வாய்ந்த ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை தாலூகாபோர்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் ஜனங்களுக்கு இரண்டு ஸ்தாபனங்களும் வரிவிதிப்பதும் பிராசிகூஷன் செய்வதும் கொடுமை செய்வதாகிறதென்றும் ஆகையால் முனிசிபாலிட்டியாருக்குள்ள அதிகாரத்தை உடனே ரத்து செய்யவேண்டியது மெத்த அவசியமாயிருக்கிறது என்றும் இதை அவசரமாக செய்யவேண்டுமென்றும் தங்கள் உபசாரப் பத்திரத்தில் தெரிவித்துக்கொண்டார்கள். கனம் முதல் மந்திரி இரண்டு பத்திரங்களுக்கும் அளித்த பதிலானது திருப்தி அளிக்கக்கூடியதாயில்லை.

முனிசிபல் கௌன்ஸிலில் தாலூகா போர்டு பிரசிடெண்டு அங்கத்தினராயிருக்கிறபடியால் நீங்களே சமரசமாய் தீர்த்துக் கொள்ளலாமென்று பதிலுரைத்துவிட்டார். இது நியாயமாக கனம் மந்திரி தமது கடமையை உணர்ந்து சொன்ன பதிலாக கொள்ளக்கூடவில்லை. அச்சமயத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மான விஷயமாய் மந்திரியின் கவனம் பூராவும் சென்றுகொண்டிருந்தபடியால் இப்படி பதிலளிக்க நேர்ந்தது போலும். முனிசிபல நகரத்திலிருந்து தொத்து வியாதிகள் கிராமங்களுக்கு வருகிறதா கிராமங்களிலிருந்து தொத்து வியாதிகள் நகரத்திற்கு வருகிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். 3-மைல்களுக்குள்பட்ட கிராமங்களில் காலரா தோன்றியபோது முனிசிபாலிட்டியார் ஏதாவது உதவி புரிந்திருக்கிறார்களா? சானிடரி ஆபீசர்கள் அங்கே வந்ததுண்டா? கிராமங்களில் சுகாதாரத்திற்கு இன்றியமையாத குடிதண்ணீருக்கு ஏதாகிலும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா? கிராம ரஸ்தாவைப் போடவோ ரிபேர் செய்யவோ உதவி புரிந்திருக்கிறார்களா? வேறு என்னதான் கிராமங்களுக்கு செய்திருக்கிறார்கள். வருஷம் 1-க்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை சுற்றுவட்ட கிராமங்களிலிருந்து வசூலித்துக்கொண்டு அதற்கு பிரதிப் பிரயோஜனமாக யாதொன்றும் செய்யாமலிருப்பது தர்மமாகுமா? அந்த கிராமவாசிகள் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களுக்கு தாலூகா போர்டாரிடமன்றோ போகவேண்டியிருக்கிறது விவசாயத்துக்கு வைத்துக்கொண்டிருக்கிற மாடுகளுக்குக்கூட வரி விதிக்கப்படுகிறது.

கிராமவாசிகளோ தாங்கமுடியாத இவ்வரிச் சுமையினால் திணறிக்கொண்டிருக்கிறார்கள். முனிசிபாலிட்டிக்குள் இருப்பவர்களுக்கு கிராமவாசிகளின் உதவி தினமானம் வேண்டுமேயொழிய கிராமவாசிகளுக்கு அவர்கள் உதவி அவசியமில்லை. கும்பகோணம் தாலூகா போர்டார் இது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டதை மிகவும் பாராட்டுகிறோம். இதர தாலூகா போர்டார்களும் கும்பகோணம் போர்டின் தீர்மானத்தை ஆமோதித்திருக்கிறார்கள். கனம் மந்திரி இப்பொழுதாவது தக்க கவனம் செலுத்தி இந்த அதர்ம வரியை முனிசிபாலிட்டியார் விதிக்க இடமில்லாமல் சட்டத்தையே திருத்திவிட ஏற்பாடு செய்வாரென்று நம்புகிறோம்.



## கிராம சுகாதாரமும், வைத்திய வசதியும்.

—:x;—

(ஸ்ரீமான் ஜீ. எம். இராமஸ்வாமி ஐயர், புத்தகரம்.)

மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் உயர்ந்த சுகம் யாதெனில் "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதுபோல் நோயில்லாமலிருப்பதே. உடுத்த உடையும் உண்ண உணவும் இல்லாவிட்டாலும் நோயற்றிருந்தால் எல்லாம் அடையமுடியும். சென்ற 50 வருஷத்திற்குமுன் நாம் அதுவிஷயமாய் எப்படி இருந்தோமென்பதை சற்று ஆராய்வோம்:—

முன்காலத்தில் நமதுகிராமங்களில நோயற்றும் குறைவற்ற செல்வத்தோடும் தீர்க்காயுளோடும் வாழ்ந்துவந்தோம். சமீபகாலமாய் தாரித்திரியத்தினாலும் நோயினாலும் வைத்திய சாஸ்திரத்திலேயே அகப்படாத புதிய புதிய வியாதியால் பீடிக்கப்பட்டு மனச்சந்துஷ்டி இல்லாமல் அற்ப ஆயுளில் மடிந்து வருகிறோம். முன்காலத்தைவிட நமக்கு எவ்வளவு வைத்திய வசதியும் விசாலமான அறிவும் உண்டாயிருப்பதாக எண்ணினாலும் அகாலமரணம் அதிகப்பட்டு வருவதைக்கண்கூடாகப் பார்க்கிறோம். இதன் முக்கியகாரணம் என்னவென்று ஆராயாமலே அநேகதலைவர்களும் கிராமசீர்திருத்தந்தான் முக்கியமென்று வாய்ஓயாமல் பேசுகிறார்களே தவிர வேலையில் இறங்கவில்லை. முன்காலத்தில் ஒவ்வொருவரும் சரீரபிரயாசைப்பட்டு வேலைசெய்வதை இகழ்ச்சியாய் கருதுவதில்லை. இப்போதோ நாகரீக படிப்பின் அறிவால் தன்வீட்டுக்குவேண்டிய சிறிய சாமான்கூட தான் வாங்கிவருவது தன் கவுரவத்திற்கு குறைவு என்று கருதுகிறார்கள். முன் நாளில் ஆண் பெண் அடங்கலும் ஜாதி, மதம், செல்வம் என்கிற பேதமில்லாமல் தங்கள் தங்களுக்கு வேண்டியதை அடைய எவ்வளவு கஷ்டப்பட்டு வேலைசெய்து சம்பாதிக்க முடியுமோ அவ்வளவும் சோம்பலில்லாமல் செய்து வந்தார்கள். ஆகையால் உண்டஉணவு ஜீர்ணமாக போதுமான வேலை கொடுப்பதால் காலாகாலத்தில் பசி உண்டாகி சாப்பிடுவதால் அஜீர்ணம் முதலிய வியாதிக்கு அனுகுணமான விஷயம் உண்டாகவில்லை. புருஷர்கள் காலை 5-மணிக்கே எழுந்திருந்து தன்னுடைய கழனியைசுற்றிப் பார்ப்பதோ மற்றவேலை செய்வதோ இல்லாமல் தற்போதைப்போல் 8மணிக்கு எழுந்திருப்பதும் படுக்கையிலிருந்தபடியே காபி குடிப்பதும் பிறகு சோம்பேரியாய் உட்கார்ந்திருப்பதுபோல் இருந்ததில்லை ஸ்திரீகளும் 5-மணிக்கு எழுந்திருந்து வீடுவாசல் முதலியது சுற்றம்செய்து மாடு கறந்து தயிர்மோர் கடைந்து சமயல்வேலை செய்துவருவதும் மாலை ஓழிந்தநேரங்களில் மாடு பெட்டியோ கோரை கொண்டுவந்து பாய் முடைவதோ முதலிய வேலைகளை செய்துவருவார்கள். ஆகையால் வேலைஇல்லாமல் உட்கார்ந்து உட்கார்ந்து சாப்பிடாமல் போதிய சரீரசிரமம் கொடுத்து வேலை செய்து வந்ததாலேயே சாப்பிட்ட ஆகாரம் சரிவர ஜீர்ணமாகி நோயற்று வாழ்ந்து வந்தார்கள். அதனால் தான் உனக்கு ஒரு விதவையும் ஒரு எருமையும் வேண்டுமா? அல்லது 1000ரூ. பணம் வேண்டுமாவென்று ஒருகதை சொல்லுவதுண்டு (அதாவது ஒருவிதவையானவள் முன்காலத்தில் தன்னுடைய சரீரசிரமத்தினால் இந்த ஆயிரரூபாய்க்கு அதிகமாகக் கூட சம்பாதிப்பாள் என்று தாத்பர்யம்) இப்போது உள்ளநிலைமையை நான் விஸ்தரிக்கவேண்டுவதில்லை. வாசகர்களே நன்றாய் அறிவார்கள். அவர்களுடைய சரீரபிரயாசையாலும் பரிசுத்தத்தினாலும வீடுவாசல் கிராமம் முதலியதை சுத்தமாய் வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படி இப்போதும் திருநெல்வேலி ஜில்லாவில்சிலகிராமங்கள் இருந்துவருகிறது. வீட்டுவாசல் (அதாவது பொதுஜனங்கள் நடமாடக்கூடிய இடமாயிருந்தாலும் வெகு சுத்தமாய் இருப்பதைப் பார்க்கலாம்) ஆகையால் அந்த கிராமஜனங்களிடம் விசேஷமாய் வியாதி வருவதில்லை. அப்படி தப்பித் தவறி ஏதாவது இரண்டொருவருக்கு வந்தாலும் இரண்டொருநாளில் சுவல்ப செலவிலோ அல்லது செலவில்லாமலோ அந்தந்த கிராமத்திலுள்ள நாட்டு வைத்தியர்களால் குணப்பட்டுவந்தது. பெரியகாயம்

உண்டானாலுங்கூட வெட்டுக்காய பச்சிலை என்ற ஒரு தழையை வைத்து கட்டுவதால் இரண்டொரு நாளில் சுவஸ்தமாய்க்கொண்டிருந்தது இப்போதோ சுவல்ப வியாதிக்கு எவ்வளவோ கஷ்டமும் பணவிரயமும் உண்டாகிறதென்பதை சொல்லவேண்டுவதில்லை என் கிராமத்தில் ஒருவர் காசிசோப்பிட்ட பாத்திரத்தை எடுத்தார் அதுகொஞ்சம் சுட்டுவிட்டது. அதற்கு இவ்விடம் வைத்தியர்களால் கூடவில்லை. மதராஸ்போய் 3-மாதம் கஷ்டப்பட்டு ஆயிரரூபாய் செலவுசெய்து கடைசியாக விரல் உதவா ஸ்திதியில் உயிரோடு திரும்பிவந்தார். இப்படிப்பட்ட தற்கால நிலைமையைப் பார்க்கும்போது ஒரு பழைய கதை ஞாபகத்திற்கு வருகிறது.

அதாவது:— அரசனும் மந்திரியும் காட்டுக்கு வேட்டையாடப் போயிருந்தபோது ஒரு ஆட்டிடயன் கல்லுகொட்டும்மழையில் தலைக்கு ஒருகல்லும் இடுப்புக்கு ஒருகல்லும் காலுக்கு ஒருகல்லுமாக வைத்துக்கொண்டு ஆனந்தமாய் தூங்கிக்கொண்டிருந்ததைபார்த்ததும் அரசன் மந்திரியைப்பார்த்து இவன் மனிதனாவென்று கேட்டார் அதற்கு மந்திரி இருப்புக்குத்தக்கினசுகம் என்று மறுமொழி சொன்னான் அரசனுக்கு விளங்காததால் மந்திரியை மறுபடி விவரிக்கும்படி கேட்டான். மந்திரி ஒருவாரத்தில் காட்டுவதாய்ச் சொல்லி இடையனை எழுப்பி வீட்டுக்கு அழைத்துவந்து அரசனுக்கு எப்படி நடக்குமோ அப்படியே சகலவிதமான சௌகரியமும் செய்து போஷித்துவந்தான். ஒருவாரம் கடந்து அந்த ஆட்டிடயனை அந்தப்புரமிருந்து இரண்டு பக்கம் இருவர் கைலாகு கொடுத்து வாசலில் அழைத்துவந்தார்கள். அப்படி வருங்காலத்தில் வழியில் வேண்டுமென்றே போடப்பட்டிருந்த வாழைக்கட்டையை மிதித்து வந்தகாரணத்தால் மாலையில் சரம்ஜன்னிமுதலியது வந்துவிட்டது. பிறகு அனேக வைத்தியர்களைக்கொண்டு ஸ்வஸ்தம் செய்து அனுப்பப்பட்டான் அரசனுக்கும் உண்மைவிளங்கியது. இந்தக்கதையைப்போல் நம்முடைய நிலைமையானது சோம்பேரியாய் வேலைசெய்யாமல் உட்கார்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதால் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணம் ஆகாமல் பலவித வியாதிஉண்டாவதும் அதற்கு சாதாரண வைத்தியம் உதவாததால் உயர்ந்த மேல்நாட்டு வைத்தியர்கள் தேவையாயிருப்பதும் வருவாயில் பாதி வைத்தியச்செலவுக்கு தொலைவதும் இப்போது உள்ள அநுபவம். கஷ்டப்பட்டு வேலைசெய்து ஜீவிக்கக்கூடிய தாழ்ந்தவகுப்பு ஸ்திரீகள் யாதொரு கஷ்டமில்லாமலும் வெகுஜல்தியில் பிரசவிப்பதும் உடனே குழந்தையை எடுத்துக்கொண்டு நடந்துசெல்வதும் அடிக்கடி பார்க்கிறோம் நம்மிலோ நமது நாட்டுவைத்தியர்களும் இவ்விடம்நகரங்களில் வசிக்கும் ஆங்கில டாக்டர்களும் போதாமல் மதராஸ் முதலிய பெரிய பட்டணங்களுக்கும் போகவேண்டி இருப்பதும் பார்த்துக்கொண்டு வருகிறோம் முன்காலநிலைமையும் தற்போதைய நிலைமையும் நம்மில் அநேகருக்கு தெரிந்தும் பழயகால வழக்க ஒழுக்க ஆசார அநுஷ்டான செய்கையால் நமக்கு நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் கிடைக்குமென்று நிச்சயமாய்த் தெரிந்தும் அந்தவழியில் திருப்புவது நாகரீகக்குறைவு என்று எண்ணி தனக்குஹிதம் செய்யக்கூடிய வழியில் செல்லுகிறோமில்லை நாகரீகம் நாகரீகம் என்று மேல்நாட்டாரிடம் எந்தெந்த கெட்டசெய்கையும் குணமும் இருக்கிறதோ அதைமாத்திரம் ஏற்றுநடக்க முற்படுகிறோமே தவிர நல்லகுணங்களோ செய்கைகளோ இருந்தால் அதை பின்பற்ற தடங்குவதில்லை. கஷ்டப்பட்டு வேலைசெய்வதிலும் எந்தத்தொழில்தான் செய்யலாமென்று விலக்குசெய்யாமல் சரீரத்தினால் உழைத்து சம்பாதிக்க வேண்டுமென்கிறதும் பிறர்கையை எதிர்பார்த்து ஒருவேலையும் செய்யாமல் உட்கார்ந்து சாப்பிடுவது ஈனமென்று நினைக்கிறதுமான உயர்ந்த குணங்களை பின்பற்றுவதில்லை. அவர்களைப்போல் மயிர்வெட்டிக்கொள்வதும் உடுப்பு உடுத்துவதும் நமக்கு அவசியமில்லாத கெட்டவஸ்துக்களை உபயோகிப்பதிலும் அவசியம் பின்பற்றுகிறோம் நமது தேசத்திலோ ஒவ்வொருவருக்கும் உகந்த சீதோஷ்ணஸ்திதியும் ஆகாரப்பொருள்களும் கிடைத்தும் நமது சராசரி வயது 23-ஆகவும் ஆங்கில நாட்டாருடைய சீதோஷ்ணஸ்திதி ஓரேவிதமாய் கஷ்டத்தைகொடுக்கக்கூடியதாயும் ஆகாரப்பொருள்களுக்கு பிறரை எதிர்பார்க்கக்கூடிய ஸ்திதியிலிருந்தும் அவர்களுடைய சராசரி வயது 53-ஆகவும் இருக்கிறது ஆகையால் இதிலிருந்து புலப்படுவது என்னவென்றால் ஒவ்வொருவரும் தன்சரீரத்தையும் இருப்பிடத்தையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதோடு சரீரத்திற்கு போதிய அளவு வேலைகொடுக்கவேண்டியது அவசியம் என்று புலப்படுகிறது.

மேல்நாட்டார்களோ நம்மிடத்தில் எந்தெந்த நல்லகுணமிருந்ததோ அதை கிரகித்து மேன்மை அடைந்திருக்கிறார்கள். நாமோ அவர்களிடம் எந்தெந்த கெட்டகுணங்களிருக்கிறதோ அதை கிரகித்து தாழ்மையடைந்திருக்கிறோம். ஆகையால் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் அரைமணியாவது சரீர சிரமப்படட்டும் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னால் எவ்வளவோ அதற்கு ஆட்சேபனை சொல்லக்கூடிய ஸ்திதியில் வந்திருக்கிறோம். இதிலிருந்து புலப்படுவதென்னவென்றால் நாளொன்றுக்கு அரைமணிகூட வேலைசெய்வதற்கு நமது சரீரத்தில் சக்தியில்லை என்றுதான் சொல்லவேண்டும் இந்த நிலைமையில் நாம்சுயராஜ்யம் அடைவதும் அடைந்தபிற்பாடு பிறசத்துருக்களிடமிருந்து நமதுநாட்டை காப்பதும் எப்படியென்பது சிந்திக்கவேண்டியவிஷயம். கடைசியாக நான்சொல்லக்கூடிய விஷயம் என்னவென்றால் நாம்ஒவ்வொருவரும் தன் வீடு இருப்பிடம் உடை சரீரம் முதலியதை சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் (அதற்கு வெளுப்பாக உடுத்துவதுமாத்திரமல்ல மனதும் சரீரமும் சுத்தமாயிருத்தல்வேண்டும்) ஒவ்வொருநாளும் சரீரத்திற்கு வேலைகொடுக்கவேண்டும் என்றும் அப்படிச்செய்துவருவதால் வியாதி விசேஷமாய் வராது என்றும், அப்படி ஏதாவது வந்தாலும் முன்காலத்திலிருந்து வந்ததுபோல் நமது சீதோஷ்ண ஸ்திதிக்கும்சரீரநிலைமைக்கும் நமது பொருளாதார நிலைமைக்கும் அநுகுணமாய் சுவல்பசெலவில் சுலபமாயும் எப்போதும் கிடைக்கும்படி நாட்டு பழய வைத்திய முறையை விருத்திசெய்யவேண்டுமென்றும். அதை ஆதரிக்கவேண்டுமென்றும், மேல்நாட்டு மோகத்தை விடவேண்டும் என்றும் நாமே சுவல்ப சிகிச்சை செய்துகொள்ள பழகவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---



# கிராம உத்தியோகஸ்தர்கள்.

## சென்னை சட்டசபையில் கேள்வியும் பதிலும்

### ரெவினியூ மெம்பரின் பேட்டி.

25-8-27 தேதி மாலை 3-30 மணிக்கு, சென்னை செயிண்டு ஜார்ஜ் கோட்டை ஆபீசில் கனம் ரெவின்யூமெம்பர் அவர்களை, சென்னை மாகாண கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் பிரசிடெண்டு ஸ்ரீமான் சுப்பையா பிள்ளை, காரியதரிசி ஸ்ரீமான் வி. ஆர். தாத்தாச்சாரியார் இவர்கள்பேட்டி கண்டு சுமார் ஒருமணிநேரம் பேசினார்கள் மதுரை ஜில்லா அலப்பலச்சேரி ஸ்ரீமான்கள் குருமூர்த்தி அய்யர் செங்கல்பட்டு ஜில்லா அழகிய மணவாள பிள்ளை, ஸ்ரீனிவாசாச்சாரியார் திருவெங்கிடம் பிள்ளை, தேவராஜ பிள்ளை முதலிய கிராம உத்தியோகஸ்தர்களும் ஆபீசுக்கு வந்திருந்தனர்.

சம்பள விஷயமாக முதலில் பேசப்பட்டது. இதுவிஷயத்தில் தாம் வெகு சிரத்தையுடன் கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்காக வரவுசெலவு கமிட்டியில் போராடியதாகவும் சம்பள உயர்வை மேற்படி கமிட்டியார் நிராகரித்துவிட்டதாயும் மாகாணக் கப்பவஜா மொத்த தொகையை மாற்றப்பட்ட இலாக்கா செலவுக்காக எடுத்துக்கொண்டு விட்டதாகவும் எப்படி இருந்தாலும் கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்த தாம் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாயும் அது அமுலுக்கு வந்ததும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ரூ 15க்கு குறையாமல் சம்பள உயர்வு கொடுக்க சாத்தியப்படுமென்றும் சொன்னார்.

ஜமீன்தாரி கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயமாய் ஏற்பட்ட மானிய சுவந்திரத்தைபற்றி யோசித்ததில் ஜமீன்தார்களிடமிருந்து வரப்பற்றிக் கொடுக்கும் மார்க்கத்தில் தாம் பூர்ணப் பிரயத்தனப்படுவதாயும் வாக்களித்தார்.

கிராம உத்தியோகஸ்தர்களை மரியாதைக்குறைவாக நடத்தும் மனப்பான்மையைக் குறித்து உதாரணமாக தாசில்தார்கள் கிராம உத்தியோகஸ்தர்களை இழிவாக நடத்துவதையும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் புதிதாக ஏற்பட்ட இதர இலாகா உத்தியோகஸ்தர்களும் நடந்துகொள்ளும் பான்மையைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது விஷயத்தில் தாம் இதற்கு முன்னரே கவர்ன்மெண்டு உத்திரவுகள் மரியாதை முதலிய சம்பந்தமாக பிறப்பித்திருப்பதாயும் அனுதாபம் காட்டி இனியும் கிராம உத்தியோகஸ்தர்களை மிக்க ஜாக்கிரதையுடன் கவுரவமாக நடத்தும்படி கவர்ன்மெண்டு உத்திரவு ஒன்று தயார்செய்து பிரதிகிராம உத்தியோகஸ்தருக்கும் ஒரு காப்பி அனுப்பிவைப்பதாயும் சொன்னார். இன்னும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் குறைகளையெல்லாம் உடனுக்குடன் சங்கம் துவாராவாகத் தெரிவித்தால் வேண்டியது செய்யப்படுமென்று சொல்லிமுடித்தார்.

---

சென்னை சட்டசபையில் 26-8-27ல்

158 ஸ்ரீமான் காரந்தின் கேள்விக்குப் பின்வருமாறு பதிலளிக்கப்பட்டது:—

சென்ற சட்டசபைக்கூட்டத்தில் கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்துவது சம்பந்தமாக நிறைவேறிய தீர்மானத்தை நெடுக அமுலுக்குக் கொண்டுவருவதாக இருந்தால் 4184009 ரூ. செலவேற்பட்டிருக்கும் ரயத்துவாரிப் பிரதேசத்தில் மாத்திரம் அமுலுக்குக் கொண்டுவருவதாக இருந்தால் 1960452 ரூ. செலவேற்பட்டிருக்கும் ரயத்வாரி பிரதேசத்தில் கர்ணங்கள், சேவகர்கள் விஷயத்தில்மாத்திரம் அத்தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டுவர 1565808 ரூ. செலவாகியிருக்கும் கவர்ன்மெண்டார் எவ்விதமான கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது வெட்டிகளுக்காவது சம்பளத்தை உயர்த்த உத்தேசிக்கவில்லை.

ஸ்ரீமான் வி வி. வெங்கட்டரமணய்யங்கார் முன்னிருந்த அளவாவது சம்பளத்தை உயர்த்த முடியுமா?

ஸ்ரீமான் முனிசாமி நாயுடு:— ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை ரயத்வாரி கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவரும் அளவுக்காவது கவர்ன்மெண்டார் உயர்த்துவார்களா?

கனம் மாஷபாங்ஸ்:— அவ்வித உத்தேசம் எதுவும் கவர்ன்மெண்டாருக்கு இருந்துவரவில்லை

## நூதன முறையில் ஏற்படுத்திய கிராமம்:

பர்த்வான் ஜில்லாவில் ஒரு நூதனமுறைக் கிராமம் அமெரிக்கன் மெதடிஸ்டு பாதிரிகளால்பிறர் இந்த காரணத்தைப் பார்த்து அனுசரிக்கத்தக்கவிதமாய் நடத்தப்பட்டு வருகிறது. இப்புதுமுறையை நடத்திவைக்க அமெரிக்காவிலிருந்து விவசாயப் பட்டம்பெற்ற ஒருவர்இருக்கிறார். சிறிய அழகான வீடுகள், அவைகளைச் சுற்றிலும் நந்தவனங்கள், இவைகளில் சிறிய குடும்பங்கள் வசிக்கலாம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனியாக நெல்விளையநிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் நல்ல கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் அவைகள் அதிக விலைபிடித்தவையல்ல. அந்த கிராமத்தில் கூட்டுறவு முறையில் பண்டகசாலையும் ஆஸ்பத்திரியும், பள்ளிக்கூடமும் இருக்கின்றன. இப்போது பத்துக்குடும்பம் அங்கே வசிப்பதாக அறிகிறோம். ஒவ்வொரு குடும்பத்திலிருந்து ஒருவர் கிராம கவுன்ஸிலுக்குப் பிரதிநிதியாய் அனுப்பப்படுகிறார். கிராம சுகாதாரம் முதலிய பொதுஜன நன்மையான வேலைகளை இந்த கவுன்ஸில் பார்த்துக்கொள்ளுகிறது. இதே வழியை இத்தேசத்தில் வேறிடங்களும் பின்பற்றலாம். ஏராளமான வாலிபர்கள் மிகுந்த ஊக்கமுடையவர்களாய் ஊழியத்தில் சிரத்தையோடு இந்த வேலைக்கு முன்வரவேண்டும். அமெரிக்கன் மிஷனுக்கு விவசாயப்பட்டதாரியை சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ள பணமிருக்கிறப்போல் தோன்றுகிறது மற்ற இடங்களில் பெரிய பணக்காரர்கள் பணவுதவி செய்தாலன்றி இப்படிச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட கிராமங்களை நிர்மாணம் செய்வதால் மிகுந்த பயனடையலாம் கிராம மனிதரில் ஒருவராக நினைத்து அவரவர்கள் தங்கள் பொறுப்பைப் பெறுவதில் இது மிக்க உபயோகமாயிருக்கும்.

223466 \\

# தலைவர் கருத்துக்கள்.

(தண்டமிழ்த் தொண்டர்)

**1. தாதா பாய் நௌரோஜி.**

இந்தியர்க் கொருபெரு தந்தையென் றெவரும்
போற்றும் பெருமைக் கேற்ற புகழ்சால்
தாதா பாய்நவு ரோஜி என் தாதா
கருத்திது கேளீர் காசினி யீர்அது
நன்று டாகிய என்னுட் டுதித்த
ஏழையர்க் கின்னல் இழைத்திடு பஞ்சம்
பிணிமுதற் பற்பல தணியாத் தொல்லைகள்
தணியச் செய்தற் கென்றே துணிந்து
முயலுவ தேஎன் போன்றோர் முதற்கடன்
அன்றியும் அதனுக் கொன்றிய ஆட்சி
நம்வயப் படலே நலம் ஆம் அஃதான்று
அன்னியர் உயரிய ஆட்சியில் இழிந்த
தன்ன சாட்சியே சாலச் சிறந்தது
ஆதலின் அதனை அடைதற்கு
ஈதுநற் பொழுதாம் எழுமின் என்பதுவே.

**2. பால கங்காதர திலகர்.**

உலகு கலங்கினும் உள்ளத் துறுதி
நிலையிற் கலங்கா நேரிய பெரியோன்
மராட நாட்டு மாமறை யாளன்
பலதிறக் கலைகளும் பயின்ற பாவலன்
தன்தாய் நாட்டிற் கின்பம் பெருகப்
படாத பாடுகள் பட்டவன் பகவற்
கீதைக் கொருபேர் உரையைச் சிறையினில்
இருந்தாய்ந் தியற்றி ஈண்டெமக் களித்தோன்
மாமுனி லோக மானியன் திலகன்
கருத்தினைக் கேளீர் காசினி யீர்அது
சுயராஜ் ஜியம்என் பிறப்புரி மையாம்
ஆதலின் அதனை வேண்டுவன் யானே
என்பதாம் இதனை ஏற்று
மன்பதைக் கின்பம் வழங்குமின் மகிழ்ந்தே.

**3. மகாத்மாகாந்தி.**

தாய் சொற் றுறந்தால் வாசகம் இல்லையாம்
என்றதை ஆங்கில நாட்டிலும் நன்று
கைக்கொண் டொழுகியகலங்கா நெஞ்சன்
எவ்வுயிர் தமக்கும் எனைத்துத் தீங்கும்
செய்யா தொழுகும் சீரிய மதமே
மதமாம் உலகில் வாழ்பவர்க் கென்றே
நித்தம் உரை செய் சத்திய நெறியன்
செறுநரும் விழையும் செயிர்தீர் உள்ளத்
தேசிகன் அன்பே சிவம் எனும் தெய்வ
மொழிவழி ஒழுகும் மூதறி வாளன்
பிறருறு துயரம் பிழைஇலவ தம்மைத்
தன்னுடைய யனவாத் தான் உவந் தேற்றுக்
கொள்வோன் அருளின் கொள்கலம் நண்ணிய
துன்பம்அத்தனையும்இன்பமாக்கொண் டீண்டு
எல்லா உயிருக்கும் ஏமம் ஆகிய
துறையினில் ஊழியம் துணையொடு புரிவோன்
என்று நிலைப்ப தொன்றும் உண்மையே
ஆதலின் யானும் உண்மையே கூறுவன்
என்றே என்றும் ஒன்றே உலகிற்கு
உரைத்தருள் புரியும் உத்தமன் ஒப்பிலாச்
சாந்த சீலன் மகாத்துமா மோகன
தாஸ்கரம் சந்திர காந்திப் பெயரினன்
மாசிலா மனத்து வள்ளுவர் மானத்
தேசுடை நாற்றெழில் செய்துவாழ்து யோன்
அன்னவன் அருளார் நன்னய மொழிஎன்
என்பிரேல் உலகீர் இயம்புவன் அதுதான்
உண்மை கடைப் பிடித்துள்ளன் புடன் ஈண்டு
உலகத் துயிர்கட் கூழியம் புரிதல்
ஆத்ம சக்தி ஒன்றையே அரிய
பெரிய ஆயுதமாய்ப் பேணிப் போற்றல்
உண்டியே உடையேஉறையுளேஎனஇவைக்கு
எவரும் பிறர் இடம் ஏகா திருக்க
முன்னுதல் அவ்வழி முயலல்
இன்னகை வரின்நமக் கின்பமாம் என்பதே.

# இந்திய ஆட்சி முறை.

## பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னும் பின்னும்

# இந்தியாவின் புராதனச்சிறப்பு.

## கிராமஸ்தாபனங்களின் மேன்மை

### ஓர் இந்தியமாணவர் ஆக்ஸ்போர்ட்டில் படித்த வியாஸம்

## அடிமை வாழ்க்கை.

"பிறரைச் சார்ந்திருப்பது துன்பவாழ்க்கையேயாகும். தன்னைத்தானே ஆதிக்கம் செய்து கொள்வதும் எவ்விஷயத்திலும் பிறரைச் சார்ந்திராமல் சுதந்திரமாக இருப்பதுமே இன்ப வாழ்க்கையாகும்" என மனுமொழிந்துள்ளார். அரசாங்கம் என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் இவ்வியாஸத்தில் ஆராயப்போவதில்லை. பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருமுன் அரசாங்க நிர்வாகம் எவ்வாறு நடந்து வந்ததென்பதைப் பற்றியும், பிரிட்டிஷ் அரசாங்க நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறதென்பதைப் பற்றியுமே சிற்சில விஷயங்கள் கூற எண்ணியுள்ளோம். இவ்விஷயம் எளிதான காரியந்தான். அவ்வளவு சிரமமானதென்று சொல்லுவதற்கில்லை. ஆனால் சில காலமாக சில நூலாசிரியர்கள் விஷயங்களைத் திரிபாகக் கூறிவருகின்றனர். இந்து முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களையும் கிறிஸ்தவர்களின் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து பிந்தியதைப் புகழ்ந்து எழுதுகின்றனர், அல்லது கடந்தகாலங்களில் இந்தியாவில் எப்பொழுதாவது நிகழ்ந்த ஒரு அநாகரிக சம்பவத்தைத் தற்கால ஐரோப்பாவின் முற்போக்கான செயல்களுடன் ஒப்பிட்டுப்பார்த்துத் தங்களுடைய அபிப்பிராயத்தை யெழுதுகின்றனர். அதிக சிரமமில்லாது பெறப் படும் வெற்றியும், தற்காலித சந்தோஷமும் துவேஷத்தைத்தான் பிறப்புவிக்கும். தேச சரித்திரம் அநாகரிகக் கலைகளுள் ஒன்று என உணர்ந்தவர்கள் தான் அதனைப்படிக்க லாயக்குள்ளவர் என ஒருவர் கூறியிருக்கிறார். ஆயினும் மற்றொரு இனத்தவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களை எழுதுபவர்கள், தங்களது வாழ்க்கையையும் கவனித்துக்கொண்டு, தங்களது கொள்கைகளையும், அவர்களது கொள்கைகளையும், தங்களது பழக்க வழக்கங்களையும், அவர்களது பழக்கவழக்கங்களையு மட்டும் ஒப்பிட்டுப்பார்ப்பது உசிதமாகும். ஒரு தேசத்தவரின் பழக்க வழக்கங்களைப்பற்றிப்பேசுங்கால் அத்தேசத்தவர்களின் நிலைமையையும், அத்தேசத்தவர்கள் எவ்வித நிலைமையிலிருக்க வேண்டியிருக்கிறதென்பதையும், உலகின் இதர பாகங்களிலுள்ள நாகரிக நாடுகள் எவ்வித நிலைமையில் அதேகாலத்தில் இருந்திருக்கின்றனவென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

### தர்ம கர்த்தர்கள்.

இத்தகைய ஆசிரியர்கள் அடிக்கடி "இந்தியா நம்மிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது." என்று கூறிவருவதோடு, உலகிலேயே எப்பொழுதும் கண்டும் கேட்டுமிராத கொடுங்கோன்மையினின்றும் இந்தியாவைத் தாங்கள் காப்பாற்றியதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்விடத்தில் கர்த்தர்கள் யார்? ஓர் வியாபாரக் கூட்டத்தவர்கள் இவர்கள் சிறிதுசெல்வத்துடன் தங்களது ஜென்மதேசம் திரும்பியபொழுது தங்கள் நாட்டவர்களால் தனிகர்களெனக் கருதப்பட்டு புகழப்பட்டனர். துன்பமனுபவித்துக் கொண்டிருந்தவர்கள், தங்களது துன்பத்தினின்றும் தங்களை மீட்டவர்களை ஒருக்காலும் துவேஷிக்க மாட்டார்கள். அன்பாக அவர்களிடம் நடந்துகொள்ளுவார்கள். 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்களைப் பற்றி ஓர் பிரஞ்சு சரித்திராசிரியர் கூறியிருப்பதாவது :—"நமது பேராசை இந்தியா முழுதும் ஒற்றுமையின்மையையேற்படுத்திவிட்டது நமது கொள்ளையடிக்கும் குணம் சூறையாடும் குணம், அவர்களை ஐரோப்பாகண்டத்தையே துவேஷிக்கும்படியும், நம்மைக் கண்டு ஓர்வித பீதிகொள்ளும் படியும், நம்மைக் கேவலமாக மதிக்கும்படியும் செய்துவிட்டது. அவர்கள் நம்மை, அக்கிரமமாகத் தங்கள் நாட்டைத் தங்களிடமிருந்து பறித்துக் கொண்டவர்களென்றும், தங்களைக் குரூரமாக நடத்திவருகிறவர்களென்றும் கருதுகின்றனர்" (ரேய்னெல் வால்யூம் 2, பக்கம் 319-20). இதேபோல ஸர் ஜான் மால்கோம் எனும் மேதாவியும் பின் வருமாறு கூறியிருக்கின்றார் :—"அவர்கள் (ஐரோப்பியர்கள்) தாங்களும், தங்களது பந்துக்களும், தங்களைச் சேர்ந்தோரும் அதிக பணம் தேடிக்கொள்ளவேண்டுமெனும் நோக்கத்துடனேயே இந்தியாவில் யாவும் செய்து வந்திருக்கின்றனர். எவ்வித உயர்ந்த அந்தஸ்திலிருந்து வருபவர்களையும் இத்தொத்து நோய் பற்றிக்கொள்ளாமலிருக்கவில்லை." (மால்கோம் அவர்களின் இந்து தேசசரித்திரம், பக்கம் 33-34) 1764-ம் வருஷம் காமன்ஸ் சபையார், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நிலைமையைப் பற்றிக்கவனிக்க ஓர் கமிட்டியை நியமித்தனர். ஆனால் அக்கமிட்டியால் எவ்விதபயனும் ஏற்படவில்லை. நாம் மேற் கூறிய பிரபல பிரிட்டிஷ் சரித்திராசியர், "இந்தியாவைச் சூறையாடும் விஷயத்தில் பலருக்கும் ஆசையேற்பட்டுவிட்டதால் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டனர். ஆகவே அதிக பலமுள்ளவர்களாயிருந்தனர்" என்று கூறியிருக்கின்றார். (பக்கம்—37.)

### கிராம ஸ்தாபனங்கள்.

சிற்சில சமயங்களில் நல்ல அரசாங்கங்கள் இருந்திருக்கின்றனவென்றும், ஆயினும் இந்தியா முழுதும் தகுந்த ஸ்தாபனங்கள் இல்லாததால் அந்நாடு துன்பமனுபவிக்க நேர்ந்திருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஸ்தாபனங்களால் எவ்வளவு பயனேற்படுமென்பதை நாம் நன்கறிவோம். அவைகள் எக்காலமும் நிலைத்திருக்குமென்பதில் சிறுதும் சந்தேகமில்லை. இந்திய கிராமங்களில் இருந்துவந்த ஸ்தாபனங்களைப்போன்ற கிராம ஸ்தாபனங்கள் வேறெங்கேனும் இருந்ததாக எந்த சரித்திரத்திலாவது கூறப்பட்டிருக்கிறதா?

### விவசாயநாடு.

இந்தியா ஓர் விவசாயநாடு, நகரங்கள் வெகு சொற்பம். இந்தியா பல கிராமங்கள் நிறைந்த ஒரு தேசம். கிராம ஸ்தாபனங்கள் இந்தியர்களுக்குச்சகல அம்சங்களிலும்உகந்தவைகளாயிருந்தன அவர்களது சுக வாழ்விற்கும் ஆன்மஞான விருத்திக்கும் அவைகளே காரணமென்று சொல்லவேண்டும். அவைகளுக்குச் சொந்தமான நிலங்களிருந்தன. அந்தந்த கிராமங்களில் வரிவசூலிக்கப்பட்டு வந்தது. மத்திய அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணத்தை எல்லாக் கிராம ஸ்தாபனங்களும் வசூலித்துக்கொடுக்க வெண்டும். அவைகளே அப்பணத்திற்குப் பொறுப்பு. மத்திய அரசாங்கம் கிராமங்களை ஒன்றுபட்ட ஸ்தாபனங்களாகவே நடத்திவந்தன அவற்றின் நிர்வாக விஷயங்களில் பெரிதும் தலையிடாமலே இருந்து வந்திருக்கின்றன. கிராமங்களில் போலீஸ், நீதி, சிறுவர்கள் கல்வி முதலியவைகளை கிராம ஸ்தாபனங்களே கவனித்து வந்தன, கிராமங்களில் பொது வாசகசாலைகள் முதலியன விருந்து வந்தன. சங்கீதமும் ஆதரிக்கப்பட்டு வந்தது சிற்சில சமயங்களில் நாடகங்களுங்கூட நடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் தற்கால அரங்கமேடைகளைப் போல ஆடம்பரமாகவும், பொது ஜனங்களுக்கு எவ்வித அறிவையும் வளர்க்கக் கூடாதனவாகவுமிருக்கவில்லை. பொது ஜனங்களின் அறிவை அவைகள் விருத்தி செய்யக்கூடியவைகளாக விருந்தன.

## குடியரசு ஸ்தாபனங்கள்.

"இக்கிராம ஸ்தாபனங்களெல்லாம், சிறு குடியரசு ஸ்தாபனங்களாக விளங்குகின்றன. அவைகட்குத் தேவைப்படுபவைகளெல்லாம் அவைகளிடமே யிருக்கின்றன. எவ்விஷயத்திற்கும் பிறரை எதிர்பார்த்திருக்கவில்லை. அநேகமாக அவைகள் எவருக்கும் கீழ்ப்படாமல் சுதந்திரமாக இருந்து வருகின்றனவென்றே சொல்ல வேண்டும். பல இனத்தவர்கள் புகழுக்குவந்து அழிந்து போனார்கள். அரசியல் புரட்சிகள் தோன்றுகின்றன; மறைகின்றன; மீண்டும் தோன்றுகின்றன. இந்துக்கள், பட்டாணியர்கள் மொகலாயர்கள், மாராட்டியர்கள், சீக்கியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்களெல்லோரும் கிரமப்படி இந்தியர்களின் எஜமானர்களாயிருந்திருக்கின்றனர். ஆனால் கிராம ஸ்தாபனங்களோ என்றைக்கும் ஒன்று போலவே இருந்து வந்திருக்கின்றன. கலகங்கள் தோன்றும்பொழுது அவைகள் ஆயுதந்தரித்துத் தங்களைக் காத்துக்கொள்ளுகின்றன. ஆடு மாடுகளைத் தங்கள் கோட்டைகளுக்குள் சேகரித்துக்கொண்டு, எதிரிகளை அவர்களது போக்குப்படியே செல்ல அனுமதித்து விடுகின்றன. அவர்கள் கோபங்கொள்ளக்கூடியவாறு நடந்துகொள்ளுவதில்லை. தங்களது கிராமங்களைக் கொள்ளையடிக்கும்படி எதிரிகள் தங்களது படைகளுக்கு உத்திரவு பிறப்பித்து விட்டார்களானால், அவர்களது சைன்யங்களைத் தாங்கள் எதிர்த்து நிற்க முடியாதெனத்தோன்றினால், கிராமத்தார்கள் எல்லோரும் அக்கம் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்கு ஓடி விடுகின்றனர். எதிரிகள் தங்களாலியன்ற அட்டூழியங்களையெல்லாம் செய்துவிட்டுப் போன பின்பு இக்கிராம வாசிகள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி தங்களது தொழில்களை மீண்டும் துவக்குவார்கள். தாங்கள் தங்களது கிராமங்களுக்குத் திரும்பமுடியாதபடி பல ஆண்டுகள் வரை அக்கிராமங்கள் எதிரிகளால் தொடர்பாக நாசமாக்கப்பட்டுக் கொண்டிருக்குமாயின், ஜனங்கள் குடியேற முடியாதபடி கொலை, களவு முதலிய கொடுஞ்செயல்கள் அக்கிராமங்களில் தாண்டவமாடிக் கொண்டிருக்குமாயின் எப்பொழுது அப்பிராந்தியங்களில் சமாதானம் நிலவுகிறதோ அப்பொழுது தான் ஆங்காங்கு சென்றுள்ள கிராமவாசிகள் திரும்புவார்கள். ஒரு தலைமுறை கழிந்தபோதிலும் அவர்களது சந்ததியார்களாவது அக்கிராமங்களுக்குத் திரும்பி வந்து விடுவார்களென்பது திண்ணம். பெற்றோர்களின் ஸ்தானங்களைவகிக்க அவர்களது பிள்ளைகள் முன் வந்துவிடுவார்கள். பழய ஸ்தானத்திலேயே அந்தந்த கிராமங்கள் ஏற்படுத்தப்படும. அவரவர்கள் வீடுகள் எந்தெந்த விடங்களில் இருந்தனவோ அந்தந்த விடங்களிலேயே அவரவர்கட்கு வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதியளிக்கப்படும். அவரவர்களின் முன்னோர்களது நிலங்கள் அவரவர்களுக்கு அளிக்கப்படும். கிராமவாசிகளை அவர்களது கிராமங்களினின்றும் துரத்துவது எளிதான காரியமல்ல. தங்களால் கூடியமட்டும் எதிர்த்துப் போராடுவார்கள். பெரும்பாலும் அவர்கள் வெற்றியடைவார்கள். தங்களால் இனி எதிரிகளை எதிர்த்து நிற்கமுடியாதெனக் கண்டபிறகே அவர்கள் தங்களது கிராமங்களைவிட்டு வெளியேறுவார்கள். இவ்வாறு கிராமங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டிருப்பதன் பயனாகத்தான் இந்தியர்கள் சுகவாழ்க்கையை நடத்த முடிந்தது. இந்தியாவில் எத்தனையோ புரட்சிகளும் குழப்பங்களும் ஏற்பட்டும் இந்திய ஜனங்கள் காப்பாற்றப் பட்டிருப்பதற்கு இதுவே காரணம். ஒவ்வொரு ஸ்தாபனமும் தன் தன் விஷயங்களை, எவரது தலையீடுமின்றி தானே கவனித்து வந்திருக்கின்றது. இந்தியர்கள் சுயேச்சையாக வாழ்ந்து வந்ததற்கும், சர்வ சுதந்திரங்களையும் அனுபவித்து வந்ததற்கும், மேற்கூறிய ஸ்தாபனங்களெல்லாம் ஒற்றுமையாக விருந்ததே முக்கிய காரணமாகும்."

(தொடரும்.) தமிழ் நாடு

# ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தி.

(ஒரு ஆரம்ப ஆசிரியர்.)

ஒரு பெரிய மிராசுதார் தன்னுடைய தோட்டங்களில் கனி தரும் பலவித விருக்ஷங்களையும், செடி கொடிகளையும் விருத்திசெய்து லாபமடைய ஆசைப்பட்டார். அதற்கு வேண்டிய தொழிற் கருவிகளை ஏராளமான திரவியம் செலவு செய்து வாங்கினார். தோட்டப்பயிர் விரைவில் அபிவிருத்தி யடையும் வழியைக்கண்டு பிடிக்க ஓர் மந்திரியையும், அவரின் கீழ் பல சங்கங்களையும் நியமித்தார். தவிர பல மேஸ்திரிகளையும் தாவரசாஸ்திரத்தில் தேர்ந்த நிபுணர்களையும் போதுமான சம்பளம் கொடுத்து அமர்த்தினார். தோட்டத்தைச்சுற்றி வேலியடைக்கவும் பொருளைச் செலவு செய்தார். நிலத்தைத் திருத்தி, உழுது, கொத்தி, முள் கல் பொறுக்கி, விதை போட்டு, தண்ணீர் விட்டு, களை பிடுங்கி வளர்க்க கணக்கற்ற வேலையாட்களையும் சம்பாதித்தார். மேற்கூறிய எல்லாம் வெகு அலங்காரமாக அமைக்கப்பெற்றும், வேலைக்காரர்களுடைய கூலிமட்டும் அவர்களிற் சிலருக்கு ¼ வயிற்றுக்கும் வேறு பலருக்கு ½ வயிற்றுக்கும் காணும்படியான திட்டமுடையதாயமைக்கப்பட்டது அவர்களின் துரதிர்ஷ்டமெனலாம். நிற்க நாளடைவில் தோட்டத்தின் தீவிர அபிவிருத்தியை அதிக கவலையுடன் எதிர்பார்த்திருந்த மிராசுதார் தோட்டத்தைச்சுற்றிப் பார்க்கச்சென்றார். அங்கு இவர் எண்ணத்திற்கு மாறாக சில விதைகள் பாதி முளைத்தும், சிலசெடிகள் சுற்றி நன்றாய்க் கொத்தப்படாததால் நறுங்கியும், வேறு பல செடிகள் தண்ணீரில்லாமல்வாடி, வதங்கிப்பட்டுப் போகுந் தறுவாயிலிருந்ததையும் கண்டார். அவருக்குண்டான விசனத்துக்கும் கோபத்துக்கும் அளவில்லை. உடனே தாவரசாஸ்திர நிபுணர்களைக் கூப்பிட்டுக் கேட்டார். இவர்கள் மேஸ்திரிகளின் மேல் பழியைப்போட்டு மேஸ்திரிகளை அழைத்துக் கண்டித்தனர். இது தான் தாமதம் உடனே மேஸ்திரிகள் சீறி வேலையாட்கள் மேல் பாய்ந்தார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டத்தையும் பார்த்துக்கொண்டிருந்த வேலையாட்கள் மருண்டு, எங்குஉண்மையைச்சொன்னால் இப்போது கிடைக்கும் கால்வயிற்றுக் கஞ்சியில் கூட மண் விழுந்து விடுமோவென்றஞ்சி மௌனம் சாதித்து விட்டனர் பலர்; வேறு சிலரோ வருகிறது வரட்டும் என்று சற்று முன் வந்து தங்கள் மேல் சீறினவர்களைப்பார்த்து வினயத்துடன் ஐயா, நாங்கள் எஜமானரால் கொடுக்கப்படும் கால் வயிற்றுக் கஞ்சியைக் குடித்துவிட்டு வேலைக்கு வருகிறோம். வேலையோ கடினமானது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பசி மறுபடியும் வந்து விடுகிறது. பிறகு வேலை செய்ய முடியவில்லை. வயிறு நிறையக்கஞ்சி ஊற்றி பசியை அகற்ற வழி செய்வீர்களாகில் நாங்கள் திருப்தியடையுமாறுநாள் முழுவதும் உற்சாகத்துடன் வேலை செய்து தோட்டப்பயிர்கள் நல்லபலனைக்கொடுக்கும் வண்ணம் பாடுபடுவோம் என்று கூறினார்கள். இவர்கள் கூறிய சமாதானம் நியாயமானது என்பதைக் கூடக் கவனியாது அவர்கள் மேல் சிலர் பாணத்தைத் தொடுத்தார்கள். பலரை வேலையைவிட்டு நீக்கிவிடுவோம் என்று பூச்சாண்டி காண்பித்தார்கள். இதைக்கண்ட வேலையாட்கள் வேறு வழியில்லாததால் எல்லாரும் ஒன்று கூடி ஒரு சங்கத்தை ஏற்படுத்தி தங்களுக்குக் கொடுக்கும் கூலி செய்யும் வேலைக்குக் கொஞ்சமும் ஈடாகாதென்பதை நிரூபணம் செய்தும் வயிராற அன்னம் போட்டால் சரியாக வேலை செய்வோம் என்றும் அதோடு வேலை செய்யத் தடையாயிருக்கும் பல முட்செடிகளை அடியோடு நறுக்கியெறிய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் மிராசுதாரைக் கேட்

டுக்கொண்டார்கள். இனி மிராசுதார் தன் தோட்டப்பயிர் விரைவில் வளர்ந்து பலன் கொடுக்க வேண்டுமென்று கருதினுல் செய்யவேண்டியது என்ன? வேலையாட்கள் கோறும் நியாயமான காரியங்களைப் பூர்த்தி செய்யவேண்டியதே அல்லவா?

அதுபோலவே தான் இப்போது ஆரம்பக் கல்வியும் நடைபெறுகின்றது கவர்ன்மெண்டாருடைய நோக்கமோ ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பது. அதற்குரிய புஸ்தகங்களுக்கும் உபகரணங்களுக்கும் பெருந்தொகை செலவிட்டிருக்கிறார்கள். டிப்டி இன்ஸ்பெக்டர்கள், எஜுகேஷனல் ஆபீசர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், டைரெக்டர்கள், மந்திரிகள், ஜில்லா போர்டுகள் தாலூகா போர்டுகள் முதலிய எல்லாம் நியமித்திருக்கிறார்கள். இனி கிராமப்பஞ்சாயத்தும் நியமிக்கப் போகின்றார்கள். லக்ஷக் கணக்கான ஆரம்ப ஆசிரியர்களையும் சம்பாதித்து விட்டார்கள். ஆனுல் கல்வியோ அபிவிருத்தி அடையவில்லையென்ற புகார்கள் மலிந்துகொண்டு வருகின்றன. இது விஷயமாய் ஆரம்ப ஆசிரியரும் பலமாகத் தாக்கப்பட்டு வருகிறார்கள். ஆனுல் கல்வி அபிவிருத்திக்குத் தடையாக விருக்கும் உண்மையான காரணம் யாதெனில் ஆரம்ப ஆசிரியரின் பசியை விருத்தி பண்ணி அவர்களுடைய மதிப்பையும், அந்தஸ்தையும் குறைப்பதேயாகும். தற்காலம் ஆரம்ப ஆசிரியருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அன்னவர் அரைவயிற்றுக்குக் கூடப்போதாது என்பது மேலதிகாரிகளுக்குத் தெரியாதோவெனில் தெரியும்.

தோட்டத்தை விருத்தி செய்யப் பாடுபடுபவர்கள் வேலையாட்களேயன்றி மேஸ்திரிகளும் தாவர சாஸ்திர நிபுணர்களுமல்ல அதுபோல் ஆரம்பக் கல்வியை இளஞ்சிறார்களுக்கு ஊட்டப் பிரயாசைப்படுவதும், பாடுபடுவதும் ஆரம்ப ஆசிரியர்களேயன்றி அதிகாரிகளல்ல. ஆதலால் யாதொருகுறைவும் நேராமல் காக்கப்படவேண்டியவர்கள், கண்ணியப்படுத்தப்படவேண்டியவர்கள் ஆரம்ப ஆசிரியர்களே. அப்படிச் செய்யாததனுலேயே மேற்படி ஆசிரியர்கள் கூட்டங்கூடித் தங்களுக்குப் போதுமான சம்பளம் வேண்டுமென்றும், அவசியமான சவுகரியங்கள் செய்து கொடுக்கவேண்டுமென்றும், அப்போதுதான் திருப்தியாய் உற்சாகத்துடன் வேலை செய்யச் சாத்தியப்படுமென்றும் தீர்மானித்துக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இனி ஆரம்பக்கல்வி அபிவிருத்தி அடையவேண்டுமானுல் காருண்ய கவர்ன்மெண்டார் செய்ய வேண்டிய நேர்வழியென்ன? விளக்கவேண்டியது அனவசியமே!

மேற்கூறிய ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் பலரும் பலவிதமாய்ப் போடுகிறார்கள். அதில் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அதாவது புருஷன் மனைவி 4 பிள்ளைகள் அடங்கிய ஓர் குடும்பத்துக்குத் தற்காலத்துக்கேற்றபடி ஒரு மாதத்துக்குச் செலவாகுந் தொகையையே ஆரம்பச் சம்பளமாக ஏற்படுத்தவேண்டும். பிறகு கிரேடுக்குத் தகுந்தபடியும், சர்விசுக்குத் தகுந்தபடியும், பலவிகிதங்களைக் கூடுதலாகச் சேர்க்கவேண்டும். இது தான் சரியான முறையாகும். இதை விட்டு விட்டு சீட்டுக் குலுக்கியும், செக்கண்டரி கிரேடுக்கு 30 ரூபாயானுல் லோயர் கிரேடுக்கு 12 ரூபாய் தான் தகுமென்று வக்கீல் வாதம் செய்தும், பணமில்லையென்று நொண்டிச் சமாதானம் சொல்லியும் காலத்தைப் போக்குவது, குதிரைக்குக் 'குர்ரம்' என்றால் ஆனைக்கு 'அர்ரம்' என்பதுதான் சரியென்று இலக்கணம் ஏற்படுத்துவதற்கும், துணிக்குத் தகுந்தபடி தான் சட்டை தைப்போம், அதற்குத் தகுந்தபடிதான் தேகத்தை மெலியச் செய்யவேண்டும் என்று பிடிவாதம் செய்வதற்குமே ஒப்பாகும்.

ஓர் ஆரம்ப ஆசிரியருக்கும் அவருடைய மனைவிக்கும் (இருவருக்கு மட்டும்) ஏற்படும் ஒரு



மாதச் செலவை மிகக் குறைவாய் மதிப்பிடலாம்.

அரிசி ரூ. 8, பருப்பு 1-8-0, காய்கறி 1 8-0 இலை 0-8-0, உப்பு 0-2-0. மிளகாய், மல்லி, புளி முதலிய பல செலவுகள் 1-8-0, நல்லெண்ணெய் 1-8-0, சீமை யெண்ணெய், 0-6-0, மோர் (நெய்யால், தயிர் வேண்டாம்) 0-8-0, விறகு 1-8-0, வீட்டு வாடகை 2-0-0, வண்ணான் கூலி 1-0-0, நாவிதன் கூலி 0-6-0, பாடசாலை உபகரங்கள் அணு 0-6-0. துணிச் செலவு மதிப்புவருஷத்துக்கு உபாத்தியாயருக்கு:—

| | | | | |
|---|---|---|---|---|
| வேஷ்டிகள் | 4க்கு | ரூ. 8 | 0 | 0 |
| துண்டுகள் | 4க்கு | ரூ. 3 | 0 | 0 |
| ஷர்ட்டுகள் | 3க்கு | ரூ. 6 | 0 | 0 |
| கோட்டுகள் | 2க்கு | ரூ. 6 | 0 | 0 |
| தலைப்பாகை வேஷ்டி | 2க்கு | ரூ. 3 | 0 | 0 |

உபாத்தியாயர் மனைவிக்கு:—

| | | | |
|---|---|---|---|
| 3 சேலை, ரவிக்கைகள், முதலியவற்றிற்கு மதிப்பு சுமார் | ரூ. 25 | 0 | 0 |
| மொத்தம் | ரூ. 51 | 0 | 0 |
| மாத சராசரி | ரூ. 4 | 4 | 0 |
| ஆக மொத்தம் | ரூ. 25 | 0 | 0 |

மேற்கண்ட மதிப்பு ரூ 25க்கு புருஷனும் மனைவியுமட்டும் சாதாரண உணவருந்தி ஜீவிக்க முடியும். 1. அவருக்குக் குழந்தைகள் பிறக்கக் கூடாது. 2. பெற்றோர், சகோதரர், சகோதரிகள் கிடையாது. 3. விருந்தாள் வரக்கூடாது. 4. தர்மம் செய்யக்கூடாது. 5 கோவிலுக்குத் தேங்காய், பழம், சூடம், சாம்பராணி, காணிக்கை முதலியவற்றிற்குச் செலவு செய்யக்கூடாது 6. வீட்டுக்கு வேண்டிய தட்டுமுட்டு சாமான்கள் வாங்கக்கூடாது. 7. உறவின் முறையாருக்குள் ஏற்படும் நன்மை தீமைகளுக்குச் செலவு செய்யக் கூடாது. 8 யார் செத்தாலும், வாழ்ந்தாலும் பிரயாணம் செய்யக்கூடாது. 9. வெற்றிலைப் பாக்கு போடக்கூடாது. 10. அந்தந்தக்காலத்தில் கிடைக்கும் பழங்களும், ஆசைப்பட்ட பண்டங்களும் வாங்கித்தின்னக்கூடாது. 11. நெய், பால், தயிர் கிடையாது. 12. பலகாரங்கள் செய்யக்கூடாது. 13. ஒருவருக்கும் கடிதமெழுதக் கூடாது. மேற்கூறியகாரியங்களில் எதையாவது தள்ளமுடியுமா? சாத்தியப்படுமா? ஆகவே எல்லாவற்றிற்கும் சேர்த்து மாதம் ஒன்றுக்குக்குறைந்தது 30-ரூபாயாவது வேண்டும். ஆகவே இதை ஆரம்பச் சம்பளமாக ஏற்படுத்திக் கொண்டுபிறகு கீழ்க் கண்டவாறு மற்ற திட்டத்தையமைக்கலாம்.

| தேர்ச்சி பெற்ற கிரேடு | சம்பளம் |
|---|---|
| லோயர் | 30—2—50 |
| ஹையர் | 40-2½—65 |
| செக்கண்டரி | 50—3—80 |

அநேக ஆரம்ப ஆசிரியர்கள் கடமையைக் கழிக்கின்றார்களே யொழிய சரியானபடி வேலை செய்வதில்லையென்று எதிர்ப்புகார்கள் சொல்லப் படுகிறது. இதற்கும் ஒரே வழிதானுண்டு. அதாவது தேர்ந்த ஆசிரியர்களைத் தக்கசம்பளம் கொடுத்து நியமித்து மேல்பார்வை சரிவரசெய்து திருப்தியாய் வேலை செய்யாதவர்களை வேலையினின்றும் நீக்குவதேயாகும் ஆகையால் தக்க சம்பளமும், சவுகரியமும் ஆரம்ப ஆசிரியர்களுக்குசெய்து கொடுத்தால் தான் ஆரம்பக் கல்வி அபிவிர்த்தியாகும்.

## ஜாதகமும் அதின் பிரயோஜனமும்.

—0—

(ஸ்ரீமான். R. சுபபிரமணிய தேய்வக்ஞர்.)

நம்முடைய தேசத்தில் விசேஷமாய் எல்லா குடும்பங்களிலும் குழந்தைகள் ஜனிக்கும் நாழிகை, தேதி, மாதம், வருஷம் இதுகளை குறித்து வைப்பதும், இந்த விபரங்களைக்கொண்டு குழந்தையின் மாதா பிதாக்களின் சௌக்கியத்தையும் குழந்தையின் பிற்காலத்திய வர்த்தமானங்களை

யும் ஜோதிடர்களைக்கொண்டு தெரிந்துகொள்வது வழக்கம். இந்த வழக்கம் ஐரோப்பாவிலும் உண்டு. முற்காலங்களில் ஜோதிஷர்களை அரசர்கள் ஆதரித்து வந்தார்கள். ஆகவே சாஸ்திர பரிச்சிகம் விசேஷமாய் நடந்து வந்தது. இந்தக் காலத்தில் ஜோதிஷர்களுக்குச் சரியான ஆதரவு இல்லர்மையால் சாஸ்திரம் சரிவர அப்பியசிக்கப் படுவதில்லை. ஜாதக பலன்கள் சரிவர எடுத்துச் சொல்வோரின் தொகையும் வரவர குறைந்து வருகிறது. பொது ஜனங்களுக்கு இந்த சமயத்தில் ஜாதகத்தின் பிரயோஜனத்தையும், ஜாதகங்களின் பலன்களை தெரிந்து கொள்ளும் வழியையும்பற்றி சங்கிரஹமாய் தெரிவிப்பது உபகாரமாகுமென நினைத்து ஜோதிஷ சாஸ்திரத்தின் ஸாராம்சங்களை நமது "கிராமானுகூலன்" மூலமாய் வெளியிடத்துணிந்தோம்.

ஒரு குழந்தை ஜனிக்கும்போது கிழக்கில் உதயமாய்க் கொண்டிருக்கிற ராசிக்கே லக்னம் எனப்படும். இந்த ராசியே ஜாதகனுக்கு ஜன்ம லக்னம். இந்த லக்னம், அந்த வீட்டிலிருப்பவன், அந்த வீட்டுக்குடையவன் அடைந்தஸ்தானம்; இதுகளைக்கொண்டு ஜாதகனுடைய ஆயுர்தாயம், சரீர ஆரோக்கியம், கீர்த்தி, ஜீவனம், சுபாவம், சரீரத்தின் அமைப்பு இதுகளைத் தெரிந்துகொள்ளலாம்.

லக்னத்திற்கு இரண்டாவது ராசி, ஜாதகனுக்குள்ள செல்வநிலை, குடும்ப க்ஷேமம், படிப்பு வாக்கு பிராபல்யம், நேத்திரங்களின் பிரகாசம், பொருள் சேர்க்கை இதுகளைச் சொல்ல வேண்டியது.

3வது பாவகம் (அல்லது ராசி,) சகோதரர்கள், சகோதரிகள், தைர்யம், பராக்கிரமம், சௌர்யம், ஜெயம், அபஜெயம் இதுகளைக் காட்டும்,

4வது பாவகம், ஜாதகனுடைய பூசொத்துக்கள், வசிக்கும் வீடு, வாஹனம், பாண்டித்தியம், பந்துக்களின் ஸ்திதி, சுகத்திற்கு வேண்டிய சாதனங்கள் இதுகளைத்தெரிவிக்கிறது.

5வது பஞ்சமஸ்தானத்தைக்கொண்டு ஜாதகனுக்கு புத்திர சம்பத்து, புத்தியின் பிரபாவம் பூர்வ புண்ணியம் இதுகளைக் சொல்லவேணும்.

6வது ராசிக்ஷதஸ்தானம். இது துஷ்டஸ்தானம் ரோக பீடை, சத்துரு பீடை, தாயாதிகளால் பீடை, கடன் ஹிம்சை, எத்னகார்யவிக்னம் அதிவிரயம் இதுகளைக் காண்பிக்கும.

7வது ராசி களத்திரஸ்தானம். களத்திர ஸம்பந்து, களத்திரத்தினுடைய சௌக்கியம், உதாரகுணம், ஜாதகனுக்குள்ள கௌரவம் இதுகளைத் தெரியச்செய்யும்.

8வது ராசி ஜாதகனுடைய ஆயிசு, மரணம் எற்படும் விதம், விபத்துக்கள், கஷ்டங்கள், நஷ்டங்கள் இதுகளைத் தெரிவிக்கும்.

9வது ராசி பாக்கியஸ்தானம். பிதாவினுடைய சுகம் ஆரோக்கியம், பிதாவினால் ஜாதகனுக்கு கிடைக்கக்கூடிய சம்பத்து, குரு ஆசாரியாள் இவர்களிடத்தில் அன்பு, தெய்வத்தினிடத்தில் பக்தி, தர்மகார்யத்தில் சிரத்தை இதுகளைக் காட்டும்

லக்னத்திற்கு 10வது ராசி ஜீவனஸ்தானம் ஜாதகனுடைய ஜீவனம் ஜீவனோபாயம், விருத்தி, புண்ணிய கர்மம், ராஜாதிகாரப் பிராப்தி, கீர்த்தி செல்வாக்கு இதுகளைக்காட்டும். இந்த ஸ்தானத்தில் குரு, புதன், சுக்ரன், சந்திரன், இவர்களில் ஒருவராது இருந்தால் ஜாதகனுக்கு தாராளமான சம்பாத்தியமுள்ள தொழில் சொல்லவேண்டும். கேந்திரம், திருகோணம், லாபம், இந்தஸ்தான ஆதிபத்தியத்துடன் கூடிய சூர்யனும், பூமிசுதனும் தசமகேந்திரத்திலிருந்தால் விசேஷ உபகாரத்தைச்செய்வர்.

11வது இடம் லாபஸ்தானம் ஜாதகனுக்குக் கிடைக்கக்கூடிய பொருள் இலாபமும், மூத்த சகோதரம் இதுகளைத் தெரியச்சொல்லும்.

12வது இடம் ஜாதகனுக்கு ஏற்படும் பொருள் விரயம், சயனசுகம், அடுத்தஜன்மம், நஷ்டகஷ்டம், இதுகளைச்சொல்லும்.



# தென் இந்தியக் கோயில்கள்.

## மஹாபலிபுரம்.

(ஸ்ரீமான் P.V. ஜெகதீச ஐயர், சூப்பரின்டெண்டெண்டு, ஆர்கலாஜிகல் டிபார்ட்மெண்டு, சென்னை.)

(Copy Right.)

—(0)—

கோதாவரிஜில்லாவிலுள்ள இச்சிவக்ஷேத்திரம் ராமச்சந்திரபுரத்திலிருந்து தென்கிழக்கில் ஐந்துமைல் தூரத்திலுள்ளது. இதற்கு பூர்வம் "தக்ஷ தபோவன" மென்றும், "தக்ஷவடிகா" வென்றும் பெயருண்டாயிருந்தன. இவ்விடம் தக்ஷன் யாகம் செய்ததிலிருந்து இப்பெயர் போலும், இவ்யாகம் சிவனது அருளன்றி செய்விக்கப்பட்டதால் இப்பொழுதும் ஜனங்கள் இப்பூமி யாகத்திற்கு உரித்தல்லாததாக எண்ணுகிறார்கள்.

பார்வதிதேவி ஒரு காரணத்தால் தக்ஷனது புத்திரியாய் மாசிமகபுண்ணியகாலத்தில் காளிந்தி நதியில் வலம்புரிசங்கமாய்த்தோன்றினாள். இவள் சிவனை மணந்து கைலாஸம் சென்றதும் தக்ஷன் அவ்விடம் போனகாலத்தில் நந்திகேஸ்வரரால் அவமதிக்கப்பட்டு திரும்பி தமதிருப்பிடம்போய் சிவனுக்கு அவிர்பாகம் கொடாமல் ஒரு யாகம் நடத்தினார். அதைக்காணவந்த தமது புத்திரியாகிய பார்வதியைக்கூட தக்ஷன் அவமதித்ததின் காரணமாய் சிவன் வீரபத்திரரை உற்பத்தி செய்து தக்ஷனது யாகத்தை கெடுக்கலாயிற்று. அத்தருணத்தில் தக்ஷன் தலையை அறுத்து வீரபத்திரர் யாககுண்டத்திலிட்டும் ஒரு ஆட்டின் தலையுடன் தக்ஷன் தோன்ற அந்த அவசரத்திலும் வீரபத்திரர் அவனை தண்டிக்க பின்னர் சிவனிடம் அண்டினான்.

இவ்விடமுள்ள பீமேசுவரர்கோயில் வியாஸமஹரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாம். அதிலுள்ள லிங்கம் சுமார் பதினைந்து அடி உயரமுள்ளது. இது தக்ஷன் கழுத்திலணிந்திருந்த பஞ்சலிங்கங்களிலொன்றென்றும் மற்றைய நான்கும் இதர இடங்களில் தனித்தனியே பிரதிஷ்டைசெய்யப் பட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது. இவ்விடம் பிரதி வருஷம் மாக மாதத்தில் பெரிய உத்ஸவம் கொண்டாடப்படுகிறது. இவ்விடமுள்ள மூர்த்தியை ஆதித்யன், காசியபர், அத்ரி, கௌதமர், பாரத்வாஜர், விசுவாமித்திரர், ஜமதக்னி, வசிஷ்டர் இவர்களும்பூஜித்து கோதாவரி நதிக்கு ஏழு முகம் ஸமுத்திரஸங்கமத்தில் ஏற்படுத்தினார்களாம்.

கோதாவரி நதி கௌதமரிஷியால் ஏற்படுத்தப்பட்டதென்று புராணங்கள் தெரிவிக்கின்றன. சுமார் துளாயிரம்மைல் நீளமுள்ள இப்புண்ணிய நதி பம்பாய் நகரத்திற்கு எழுபதுமைல் வடகிழக்கிலுள்ள திரியம் பகத்தில் உற்பத்தியாகிறது. அவ்விடத்தில் எழுநூறு அடி உயரமுள்ள ஸ்தானத்தில் ஒரு பிம்பத்தினது வாயின் மூலமாய் ஜலம் ஆரம்பமாகிறது. அந்தியத்தில் சுமார்ஒரு மைல் அகலமுள்ளதாயினும் இந்நதி மத்தியில் இரண்டு, இரண்டரைமைல் தூர அகலமுடையதாயிருக்கிறது. இவ்வேழு பிரிவுகளின் முகத்துவாரம் புண்ணிய ஸ்தலமாக கருதப்படுகிறது. இவ்வேழு முகத்துவாரங்களிலும் ஸ்நானம் செய்கிறதற்கு "சப்த சாகர யாத்திரை" எனப்பெயர். இவ்வேழு பிரிவுகளை ஏற்படுத்திய மஹரிஷிகளாவன :—கச்யபர், அத்ரி (இந்த கட்டத்தில்த்தான் மாரீசன் ஸ்ரீராமர் கையம்பினால் மரணமடைந்ததாக ஏற்படுகிறது,) கௌதமர், பாரத்வாஜர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி, வசிஷ்டர், இவ்வேழு பிரிவுகளில் தற்காலம் பாரத்வாஜர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி இம்மூவர்களதும் பூமியில் தெரியாமல் அந்தர் வாஹினியாய் தற்

உ

# மதுகரமானினி.

(ஸ்ரீமான். S. S. ராஜகோபால அய்யங்கார் B. A. B. L.)

———o———

(*All Rights Reserved.*)

———(o)———

மகாகவி ஷேக்ஸ்பியரால் இயற்றப்பெற்ற, அண்டோனி கிளெப்பெட்ரா என்னும் நாடகத்தை தழுவி எழுதப்பெற்றது.

———

மதுகரன், கருணாரசன், லளிதோத்தமன். } திரிப்பிரதானிகள் அல்லது ரமண இராச்சியத்தின் கூட்டரசர்கள்.

சித்திரரூபன்—இறந்த ஓர் பிரதானியின் புதல்வன்.

இங்கிதன், வீரசேனன், இனமணி, சகாயன், தீர்த்தன், தருணன், பாலன் } மதுகரனுடைய சிநேகிதர்கள்.

மந்தாரன், உக்கிரகேது, தனபதி, பிராணபதி, தயாபதி, குலபதி. } கருணாரசனுடைய சிநேகிதர்கள்.

மதுரன், மகுடன், விசயன். } சித்திரரூபனுடைய சிநேகிதர்கள்

தாருட்யன்—கருணாரசனது தலைமைச்சேனாதிகாரி.

சல்லியன்—வீரசேனனது சேனையின் ஓர் சேனாதிகாரி

இரேணுகன்—மதுகரனால் கருணாரசனிடம் அனுப்பப்படும் ஓர் இராசதூதன்.

அமலன், மதயந்தி, சீலன், தருமன். } மானினியின் ஊழியர்கள்,

குறியுரைப்போன்.

ஓர் பட்டிக்காட்டான் (குடியானவன்)

மானினி—மறவ நாட்டரசி.

அங்கனை—மதுகரன் மனைவி, கருணாகரன் சகோதரி.

வனசம், சலசம் } மானினியின் அந்தப்புர ஸ்திரீகள்.

சேனாதிகாரிகள்—சேனாவீரர்கள், பின்னும் காலாட்கள்.

காட்சி—ரமண இராச்சியத்தின் பலவிடங்கள்.

## அங்கம்—1.

### காட்சி—1.

இலக்ஷணபுரி, மானினியின் அரண்மனையிலோர் அரங்கு.

தருணனும்—பாலனும் வருதல்.

பாலன் :—அதிருக்கட்டும், நமது தலைவரது மோகம் அளவு கடந்து நிற்கின்றதே ; கவசம் பூண்டயுத்த தேவதையெனச் சேனைத்திரளின் ஒழுங்கை நோக்கிய சோதிமயமான அழகியகண்களை வணங்கித் தனது நாட்டத்தையும், பத்தியையும் எலுமிச்சம்பழத்தின் நிறங்கொண்டதோர் பெண்பாலிடத்தல்லோ செலுத்தி விட்டனர். பெரிய யுத்தங்களில் கவசக்கட்டிலுமடங்காது பொங்கி யெழுகின்ற கோபத்தைக்கொள்ளும் அவரது சிறந்த இதயத்தினின்றும் அக்குணத்தை அகற்றி மறவப்பெண்ணின் காமத்தீயை அடக்குவதற்கேதுவான துருத்தியும் விசிறியும்போல் இதயத்தை ஆக்கிவிட்டனரே, (உள்ளேயிருந்து வாத்தியவோசையுண்டாகுதல்) அவர்கள் அதோ வருகின்றனர்கள் பார். சற்றுக்கவனித்துப் பார்ப்பாயேயானால் ரமண ராச்சியத்தைத் தாங்கும் மூன்றாவது தூணைப்போன்ற இவர் ஓர் வீணைப்பெண்ணை அகங்களிக்கச் செய்யுமாறு பித்தனைப்போற் பாடுவதைக் காணலாம். கவனித்துப்பார்.

மதுகரனும்—மானினியும்.

(தத்தம் பரிவாரங்களுடன் வர, மானினியின் பேடிகள் அவளுக்கு விசிறிக்கொண்டு வருதல்.)



னி :—நீர் என்னை நேசிப்பது உண்மைதானே ? எம்மாத்திரம் என்னை நேசிக்கின்றீர், சொல்லும்.

மது:—அளவிடக்கூடிய நேசம் அரைநேசமேயன்றோ?

மானி :—என்னை எந்தமட்டில் தாம் நேசிக்கலாம் என்பதற்கெல்லை யேற்படுத்திவிடுகின்றேன்.

மது :—அப்படியானால் நீ இன்னும் ஓர் பூமியும் சுவர்க்கமும் சிருஷ்டிக்க வேண்டியதாகும்.

(கையாள் ஒருவன் வருதல்.)

கையாள் :—அரசே! ரமணபுரியினின்றும் சமாசாரம் வந்திருக்கிறது.

மது :—என்ன சங்கடம் இது ; சுருக்கிச்சொல்

மானி :—மதுகரா, அப்படியல்ல சமாசாரத்தைச் செவ்வையாகக் கேளுங்கள். ஒருகால் உத்தமி கோபங்கொண்டிருக்கலாம். இல்லையானால் இன்னும் முகத்தில் மீசை யரும்பப்பெறாத கருணாரசன் " இதைச்செய், அதைச்செய். இந்த இராச்சியத்தைப்பிடி, இந்த இராச்சியத்தைவிடு என்று ஏதோ கடுமையான உத்தரவைத் தமக்கனுப்பி, அப்படிச் செய்யாவிட்டால் உன்னை நாசம் செய்துவிடுவேன் " என்று ஏன் விதித்திருக்கக்கூடாது ?

மது :—பிராணசகி, எப்படி ?

மானி :—ஒரு கால் அனுப்பியிருக்கலாம், என்? அநேகமாக அப்படியே தானிருக்கலாம். தாம் இனி இங்கிருக்கலாகாது. இவ்விடத்தைவிட்டுப் புறப்படத்தமக்குக் கருணாரசன் உத்தரவு அனுப்பி இருக்கிறான்; மதுகரா ஆகையால் அதைக்கேளுங்கள். உத்தமியின் கட்டளை எங்கே? ஐயோ கருணாரசன் கட்டளை எங்கே? அடடா இருவருடைய கட்டளையுமெங்கே!

நிரூபம் கொண்டு வந்தவர்களைக் கூப்பிடு. நாம் இம் மறவநாட்டாளும் அரசியானதால் மதுகரா, தாம் வெட்கப்படுகின்றீர் போலும் ; தமது சரீரத்திலோடும் இரத்தம் கருணாரசனுக்கே உரியதன்றோ? அல்லது இனிய குரலுடன் கூடிய உத்தமி தம்மைத்திட்டினாலும் இப்படித்தான் வெட்கப்படுவீர். நிருபம் கொண்டு வந்திருப்பவர் எங்கே ?

மது :—மானினி !

உலகெவருக்கு மொன்றும் உணவதை யளிப்பதன்றோ,
நிலமது மண்ணாலாய நிலையிலாப் பொருளேயாமால்,
மலைவருகன்னிநீரில் மணபுரி கரைந்தாலுந்தான்,
தலைவி நின்னுடனும் கொள்கைவிட்டகலேனம்மா.

ரமணபுரி, கன்னி நதியிற் கரைந்தோடினாலும் சரி சீர்கொண்ட ரமண மண்டலம் நிலைகுலைந்தாலும் சரி, நான் இவ்விடம் விட்டகலுவதில்லை. இராச்சியங்களோ களிமண் உண்டைகள் அற்பப் பொருள்களாலாக்கப்பட்டுள்ள இம்மண்ணுலகம் மானிடருக்கும் மிருகங்களுக்கும் ஒரே விதமான உணவளிக்கின்றது; இவ்வாறு செய்வதே சென்ம சுகிர்தம் (ஆலிங்கனம் செய்தவண்ணம்) இப்படிச் செய்யும் நம்போன்ற இருவருக்கிணை யில்லையென்று உலகோர் சொல்லாவிடில் அவரைத்தண்டிக்க வேண்டும்.

மானி :—பெரும் பொய் ! உத்தமியை எதற்காகக் கலியாணம் செய்து கொண்டதோ, எதற்காக அவள் மேல் அன்பில்லையோ ? என்னை பயித்தியக்காரியென்றே தப்பாக நினைத்துக்கொண்டிருக்கட்டும். அப்பொழுதே மதுகரன் தன் குணத்தோடும் விளங்குவார்.

மது :—ஆம், அப்படித் தானிருப்பான். மானினி அவனை அவ்வாறு இருக்கச்சொல்லித் தூண்டினால்; நல்லதிருக்கட்டும். அன்பெனும் தேவதையளிக்கும் அன்னியோன்னிய வாழ்க்கையைவிட்டுக்கடுத்துப்பேசிக்காலங்கழிக்க வேண்டாம் இன்பத்திலன்றி ஒரு நிமிஷத்தையும் போக்கக் கூடாது, இன்றிரவு எப்படி விளையாடுவோம் ! சொல்.

மானி :—அதிருக்கட்டும் தூதுவர் கொண்டு வந்திருக்கும் சமாசாரத்தைக் கேளுங்கள்.

மது :—சீ, நல்லாசாத்தி, சண்டைக்கிழுக்கிற ராசாத்தி! வசவு, அழுகை, சிரிப்பு எல்லாம் உனக்குப் பாந்தமாகவே இருக்கிறது. எந்த மனோவிசாரமும் உன்னிடத்து அழகு பெற்று விளங்குகின்றது. தூதுவர் ஒருவரையும் அழைக்கவேண்டாம்; ஆனால் உன்பரிவாரமும் நாமும் இன்றிரவுத்தனித்துத் தெருக்களில் திரிந்து சனங்களின் குணங்களைக் கவனிப்போம். அரசீ, வா : நேற்றிராத்திரி இப்படிச் செய்யவேண்டு மென்றாயல்லவா, வேறு பதிற்சொல்லாதே.

(மதுகரனும் மானினியும் பரிவாரத்துடன் நீங்கல்)

தருணன் :—மதுகரனுக்கு கருணாரசனிடத்து இவ்

பாலன் :—மதுகரன் சிலவேளைகளில் தனது குணங்குன்றி நிற்கின்றான், அப்பொழுது அவனை மதுகரனென்று மதிக்கத்தகாது.

தருணன் :—இவன் 'இப்படியிருககிறுன் என்று ரமண புரியில் உண்டாகும் பிரஸ்தாபத்தை இவன் மெய்யாக்குகின்றுன். அது எனக்கு மெத்தவருத்தமாக இருக்கின்றது, போக போக எல்லாம் சரியாகிவிடும் என்றெண்ணுகின்றேன் நான் போய் வருகின்றேன் நீ சௌக்கியமாக இரு.

(சென்று விடுகின்றனர்.)

காட்சி—2.

இலக்ஷணபுரி அரண்மனையில் வேறோர் அரங்கு.

(அமலன், வனசம், சலசம் வருதல்)

வன :—அமலராசா, அமலமதாம் எல்லாத்தையுங்காட்டிலும் நல்ல அமலேயா, ஏகமாக ராசாத்திகிட்டே புகழ்ந்தையே. அந்த குறிகாரன் எங்கே? கொம்புலே மாலே போட்டுகிட்டு வரப்போற ஆமண்டையான் ஒருத்தன் சொன்னேயே அவனே தெரிஞ்சுகிட்டாதேவலே.

அமலன் :—குறிகாரா.

(குறியுரைப்போன் வருதல்.)

குறி :—ஐயா ?

வன :—இவுங்கதானு? எல்லாம் சொல்லுவீங்களாமே, நீங்கதானு ?

குறி :—பூமியில் ஒளிந்திருக்கும் இரகசியங்களில் ஏதோ கொஞ்சம் சொல்லுவேன்.

அம :—ஒங்கையை அவர்கிட்டே காட்டேன்.

(இங்கிதன் வருதல்.)

இங்கி :—நல்ல சாப்பாடு கொண்டுவாருங்கள் செவ்வையாகத்தின்றுவிட்டு மானினிதேவியை வாழ்த்துவோம்.

வன :—நல்ல அதிட்டம் கொடுங்கசாமி.

குறி :—நான் கொடுக்கமுடியாது, அதிர்ஷ்டத்தைக் குறியுணர்ந்து சொல்வேன்.

வன :—ஆனு, எனக்கு ஓர் குறி பார்த்துச் சொல்லுங்க

குறி :—நீ இப்பொழுதிருப்பதிலும் அதிக அழகுடன் இருக்க போகின்றனே.

வன :—ஒடம்பு அழகைச்சொல்லறுங்க.

சலசம் :—ஆமாம் வயசாக வயசாக நீ வர்ணத்தை பூசிக்குவே யல்லவா ?

வன :கடவுளே, மூஞ்சிமாத்திரம் சுருக்கம் விழாமல் இருக்கணும்.

அம :—அவுங்க குறி சொல்லுகிறதைக் கெடுக்காதே, கவனமாகக்கேளு.

வன :—ஆ! அப்படி இருக்கிறதை விட நல்லா தின்னு விட்டு மயங்கியல்லாகடப்பேன்.

அம :—சும்மா இரேன், அவுங்க சொல்லறத்தைக் கேளேன்.

வன :—சரிதான், இருக்கட்டும். நல்ல குறியாகப்பார்த்துச் சொல்லுங்க ! ஒரு மத்தியானத்திற்குள்ளே மூணு ஆமண்டையான் கலியாணம்பண்ணிக்கிட்டு அவனுவளுக்கு அறுத்தாலும் எனக்குசம்மதம். ஐம்பது வயசிலே நான் பிள்ளே பெத்து அந்த பிள்ளே சாதக நாட்டுகொலேத்தொழிலாசன் கும்பிடறபிள்ளேயாயிருக்கணும் கருணாசன் என்று இருக்காங்களே அவுகளே கலியாணம் செய்துகிட்டு என் இராசாத்திக்குத் தோழியா இருப்பேனு பார்த்துச் சொல்லுங்க.

குறி :—உன் அரசிக்குபிறகும் நீ உயிருடன் இருப்பாய்

வன :—நல்லவேளே சாவாமே இருக்கிறதினுன்னும் எனக்குச் சம்மதந்தான்.

குறி :—நீ இனி வாழப்போகின்றதிலும் செவ்வையாக முன் வாழ்ந்திருக்கின்றனே.

வன :—இம்மே எனக்கு பிறக்கப்போகிற பிள்ளீங்களுக்கு அப்பன் பேர் கூட தெரியாதாங் காட்டியும் அதிருக்கட்டும், சலசத்துக்குப்பார்த்துச் சொல்லுங்க.

அமலன் :—நாம் எல்லாரும் பார்த்துக்கொள்வோம்.

இங்கிதன் :—எனக்கு வரப்போகிற அதிர்ஷ்டம் தெரியுமாடா. எல்லாருக்கும் வரப்போகிற அதிர்ஷ்டம் தெரியுமா ? செவ்வையாகத் தின்றுவிட்டு படுத்துக்கொண்டு இன்று இராத்திரி புரளுகிறதுதான்

சலசம் :—வேறே ஒண்ணும் தெரியாமெ போனலும் இந்த கையிலே பத்தினித்தனம் செம்மையாகத் தெரியும், பாருங்க.

வனசம் :—ஆமாம், நீலநதி நிறைய தண்ணி போனுக்கே பஞ்சம் வரப்போறதென்று தெரியுமல்லவா? அப்படித்தான்.

சலசம் :—போடி, முரட்டு வெள்ளாட்டி. ஒனக்கென்னடி குறிதெரியும்? (தொடரும்).



# பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும்,

(ஒரு பாங்க் காஷியர் எழுதுகிறுர்.)

(166-வது பக்கம் தொடர்ச்சி.)

மேற்கூறியபடி டிஸ்கவுண்ட் செய்தவுடன் யார் பேரால் அந்த பில் எழுதப்பட்டிருக்கிறதோ அவருக்கு அந்தபில்லை அனுப்புவார்கள். அந்தபில் கையில் வந்த உடன் அந்த வியாபாரி தனக்கும் தன்பேரால் உண்டி எழுதியிருக்கிறவர்க்கும் முன்னடியே நடந்திருக்கும் உடன்படிக்கைப்பிரகாரம் அந்தபில் எழுதப்பட்டிருக்கிறதா வென்றுபார்த்து அப்படி சரியாகவிருந்தால் அந்த பில்லின் குருக்கே ஒப்புக்கொள்ளப்பட்டது (Accepted) என்று எழுதி கையொப்பம் செய்து திரும்பவும் பாங்கர்களிடம் அனுப்பி விடுவார்கள். பில் இம்மாதிரி ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு அதில்கண்டபணம் கொடுக்கவேண்டிய கெடுத்தேதிக்கு ஒரு வாரத்திற்குமுன் பாங்கர்கள் அதை ஒப்புக்கொண்ட வியாபாரிக்கு பில்லின் தொகை இன்ன தேதியில் கெடுவாகிறதென்றும் அதன்படி தொகையை கெடுத்தேதியில் பாங்கில் கொண்டு செலுத்தி பில்லை ரத்து செய்து வாங்கிக்கொண்டு போகும்படி ஓர் நோட்டீஸ் கொடுத்து விடுவார்கள். அதே மாதிரி கெடுத்தேதியில் பணத்தைக் கட்டிவிட்டு அந்த வியாபாரி பில்லை ரத்து செய்து வாங்கிக் கொண்டுபோய் விடுவான். பாங்கர்கள் அனுப்பிய பில்லை ஒப்புக்கொள்ளாமல் திருப்பி யனுப்பித்தாலாவது ஒப்புக்கொண்டு கெடுத்தேதியில் பில்தொகையைச் செலுத்தத்தவறினலாவது பாங்கர்கள் சட்டப்படி ஏற்பட்டிருக்கிற 'நோடரி' (Notary) ஆபீசரிடம் பில்லை அனுப்பி அவர் முன்னல் பில் தொகையைச் செலுத்தாமலிருந்து விட்டதாகத் தாக்கல் செய்துவிடுவார்கள். அப்படிச் செய்வதற்கு 'ப்ரொடெஸ்ட்' (Protest) செய்கிறதென்று சொல்லப்படும்.

யார்பேருக்கு பில் எழுதப்பட்டிருக்கிறதோ அவர் தொகையை கெடுத்தேதியில் கொடுக்கத் தவறினல், மேற்கூறிய பிரகாரம் பாங்கர்களால் டிஸ்கவுண்டு செய்யப்பட்ட பில்லுக்கு பில் எழுதிக்கொடுத்த வியாபாரியிடம் பாங்கர்கள் பணத்தைப்பெற்றுக்கொள்ளுவார்கள். இதிலும் பாங்கர்கள் பில் சம்மந்தமாய்க் கொடுக்கும் தொகைகளுக்கு இரண்டுபேர் ஜவாப்தாரிகளாக விருப்பது காணலாம். வியாபாரிகளுக்கும் இதன்மூலமாய் எவ்வளவு சௌகரியங்கள் இருக்கிறதென்றும் தெரியவரும். வியாபாரிகள் ஒருவருக்கொருவர் சமயங்களில் ஒத்தாசைசெய்துகொள்ளும்பொருட்டு இந்தமாதிரி பில் எழுதிபாங்கர்களிடம் டிஸ்கவுண்டு செய்கிறது வழக்கம். இம்மாதிரி ஒழுங்கான வியாபாரமுறைக்கு மீறித்தப்புப்பிரயோகம் செய்யும் பில்களையும் பாங்கர்கள் உண்மையாக வெண்ணி டிஸ்கவுண்டுசெய்யும்படித்தான் இருக்கும் நாணயம் ஒழுங்காக விருக்கும்வரையில் ஒரு கேடும் வராது. இம்மாதிரி பில்களுக்கு கெடுத்தேதியில் பணம் கொடுக்கத்தவறி எழுதினவரும் பில் தொகையை பாங்கர்களிடம் கொடுக்காமல் சால்ஜாப்பு சொல்ல ஆரம்பித்தால் பில் சம்மந்தப்பட்ட இருவருடைய நாணயமும் தவறி அவர்கள் தப்பான பில் எழுதினசமாசாரமும் வெளிப்பட்டால் பாங்கர்களுக்கே ஆச்சரியத்தையுண்டாக்கும். பணத்தைக்கடன் கொடுப்பதில் பாங்கர்கள் எவ்வளவுஜாக்கிரதையாய் இருந்தபோதிலும் அவர்களையும் மிகது தந்திரமாய் ஏமாற்றி மோசம் செய்கிறதானது வரவா மிகசகஜமாகவிருக்கிறது. அதற்கு திருஷ்டாந்தங்கள் நமக்கு பலவாறு தெரிந்தும் இருக்கின்றன. கேள்விப்பட்டும் இருக்கிறோம். அதனல் வியாபாரத்தையும் நிறுத்திவிடமுடியாது. பாங்குகளையும் மூடிவிடமுடியாது.

நடைமுதல் கணக்கில் அதிகப் பத்து வரவு செய்தல் (Overdrafts.), என்னும் ஒருசௌகரியம் வியாபாரிகளுக்கு பாங்கர்கள் செய்கிறார்கள். அது வியாபாரிகளுக்கு மிகவும் உபயோகமாகவும் அவசியமாகவும் இருக்கிறது. ஏற்கனவே நடைமுதல் கணக்குகளின் உபயோகங்களைப் பற்றிச் சொன்னோம். அதில் போட்டபணத்தைதிரும்பி வேண்டிய சமயத்தில்வாங்கிக்கொள்ளலாமென்று மாத்திரம் சொல்லப்பட்டது. தகுந்த வியாபாரிகளுக்கு பாங்கர்கள், அவர்கள் கணக்கில் பணமில்லாமலிருந்தாலும் அவரவர் யோக்யதைக்குத் தகுந்தவாறு இவ்வளவு ரூபாய் வரையில் அதிகமாக வாங்கிக்கொள்ளலாம் என்று அனுமதிகொடுப்பார்கள். வியாபாரிகளுக்கு எதிர்பாராமல் அடிக்கடி பணத்திற்கு முடை ஏற்படும். ஒவ்வொருசமயமும் கடன் வாங்குவதற்கு மனுசெய்துகொண்டிருப்பதும் சிரமசாத்தியமாகவிருக்கும். கடனுக்கு மனுக்கொடுத்து மனு சாங்ஷன் ஆகிற வரையில் முடை தங்காது. அப்படி ஏற்படும் முடையானது சொல்பகாலத்திற்குத்தான் இருக்கும். அதாவது உயர்ந்தது 10-நாளைக்குத்தான் வேண்டியதாகவிருக்கும். இப்படி சொல்பகாலங்களுக்கு அவசரமாக வேண்டிய தொகைகளுக்காக கடன் விண்ணப்பம் செய்துகொண்டிருப்பது சாத்தியமில்லை. இதற்காகத்தான் நடைமுதல் கணக்குகளில் அதிகப் பத்து வரவு செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி சௌகரியம் யோக்யதையுள்ளவர்களெல்லோருக்குமே கொடுப்பதில்லை. யோக்யதையோடுகூட யாருக்கு அவசியமானதென்று பாங்கர்களுக்குத் தோன்றுகிறதோ அவர்களுக்கு மாத்திரம் தான் இவ்வித சௌகரியம் செய்து கொடுப்பார்கள். நடைமுதல் கணக்கில் வாங்கின அதிகப் பத்தாம் தொகைகளை நீண்டகாலம் வைத்திருக்க பாங்கர்கள் அனுமதி கொடுக்கமாட்டார்கள். நீண்டகாலக் கடனாக இந்த அதிகப் பத்துத் தொகையை பாவித்து அப்போதைக்கப்போது திருப்பிக்கொடுக்காமல்வைத்துக்கொண்டுவிட்டால் பாங்கர்கள் அப்படி அதிக நாள் வைத்துக்கொண்டவர்களுக்கு இந்த சௌகரியத்தை ரத்து செய்துவிடுவார்கள். முக்கியமாய் இவ்வித சௌகரியம் வியாபாரிகளுக்கே கொடுக்கப்படுமல்லாமல் சாமானிய ஜனங்களுக்குக் கொடுக்கிறதில்லை. அதிகப் பத்தாக நடைமுதல் கணக்கிலிருந்து வாங்குவதற்கும் எப்படி சொந்தப் பணத்தை வாங்குவதானால் செக் எழுதிக்கொடுக்கிறார்களோ அதே மாதிரி அதிகப்பத்தாக வாங்குகிற தொகைகளுக்கும் செக்குத்தான் எழுதிக் கொடுக்கவேண்டும். இங்கும் தன் கணக்கில் எவ்வளவுதூரம் வரையில் அதிகப்பத்தாக வாங்கலாம் என்று ஒருவருக்கு பாங்கர்களால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த எல்லைக்குமீறி அதிகத் தொகைகளுக்கு செக் எழுதிக்கொடுத்தனுப்பினால் அம்மாதிரிச் செக்குக்கு பாங்கர்கள் பணம் கொடுக்கமாட்டார்கள். "எழுதினவரைக் கேட்டுக் கொள்ளவும்" என்று செக்மேல் எழுதிக்கையொப்பமிட்டுக் கொண்டுவந்தவரிடம் திருப்பிக் கொடுத்துவிடுவதனால், செக் எழுதினவருக்குண்டாகும் கெடுதிகளைப்பற்றி ஏற்கனவேசொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் முன் யோசனையுள்ளவராக இருந்தால் எல்லைக்கு மீறினதொகைகளுக்கு செக் எழுதமாட்டார்கள். இம்மாதிரி நடைமுதல் கணக்கில் அதிகப் பத்து வரவு செய்யும்படியான சுதந்திரமும் ஜாமீனன்னியில் பாங்கர்கள் கொடுக்கமாட்டார்கள். கவர்ன்மெண்டுபத்திரத்தின் ஜாமீன் பேரிலே தான் அதிகப்பத்து செய்துகொள்ள அனுமதி கொடுப்பார்கள். எந்த எல்லைமட்டும் அதிகப்பத்து செய்யலாமென்ற சுதந்தரம் கொடுக்கிறார்களோ அத்தனைரூபாய்க்கு மேற்கூறியபடி ஜாமீன் பத்திரம் எழுதிப் பெற்றுக்கொண்ட பிறகுதான் அந்த சுதந்தரத்தை உபயோகிக்க பாங்கர்கள் அனுமதி கொடுப்பார்கள். இந்த அதிகப்பத்துக் கணக்கில் வாங்கும் தொகைகள் கூடிய சீக்கிரம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்ற நிபந்தனையில் மாத்திரம்

(தொடரும்.)



# ராணா பிரதாபசிம்மன்.

## அல்லது

## "ரஜபுத்திர தேசபக்தி."

(ஸ்ரீமான் மகாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது)

(All Rights Reserved)

(0)

(168-வது பக்கம் தொடர்ச்சி)

அந்த நாற்காலிகளுக்குச் சமீபத்தில் உயர்ந்தவர்ணச்சேலை விரிக்கப்பட்ட மேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. நான்கு சுவர்களிலும், ரஜபுத்ர நாட்டின் பெயர்போன சித்திரக்காரர்களினால் எழுதப்பட்டு அழகிய வர்ணங்களைத் தீட்டப்பெற்றஉயர்ந்ததான சித்திரப் படங்கள் பல மாட்டப்பட்டிருந்தன. அழகிய பட்டுத் துணியினால் வட்டமான பந்தல்போல் விதானம், போடப்பட்டு, பலவகை நிறங்கொண்ட பொன்மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. மீவாரநாட்டிற்கு அதிபராய் விளங்கிய, முடிமன்னர்களின் படங்கள் ஓர் பக்கத்தில் வரிசையாக தொங்கவிடப்பட்டிருந்தன. அந்நாட்டின் சுதந்தரத்திற்காக தந்தம் அருமையான உயிரைப் பலிகொடுத்து, பகைவர்களுடன் யுத்தம் செய்து வீர சுவர்க்கம் புகுந்த தியாக புருஷர்களான வீரர்களுடைய படங்கள், அழகிய பொன்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு ஒரு பக்கத்தில் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன. அந்தப்படங்களுக்கு கீழே ஒவ்வொரு வீரரின் பெயரும் அழகிய பசும்பொன்னில் விலையேறப்பெற்ற வைரங்களால் பொறிக்கப்பட்டிருந்தன.

சுவற்றின் மற்றொரு பக்கத்தில், மீவார நாட்டின் பெயர் போன வீரமாதர்களுடைய படங்கள் வெற்றியுடன் இலங்கின. மாதர்கள் தத்தம் இன்னுயிர்மக்களுடன் தீக்குளிக்கச்செல்லுவதையும், வீரர்கள் மஞ்சள் உடையணிந்து, போர்க்கோலம்பூண்டு, களம் நோக்கிச்செல்வதையும் விளக்கும்படியான சித்திரங்களும் ஓர் பக்கத்திலிருந்தன. ஜன்னல்களில் அழகிய பீங்கான் பாத்திரங்களில் விதம் விதமான மலர்ச்செடிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. மேற்குப்புறத்திற்குச் சமீபத்தில் சுமார் ஐந்தடி உயரமுள்ள அழகிய தந்தத்தினால் செய்யப்பட்ட அழகிய அலமாரி ஒன்று, [illegible] பக்கம் கண்ணாடி போடப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அந்த அலமாரிக்குள் உயர்ந்த செம்பொன்னை உருக்கி வார்த்த அம்பிகை பவானியின் விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ரத்ன ஆபரணங்களும் நறுமலர் மாலைகளும், அழகிய பொன்முடியும் வைரகங்கணங்களும் அம்பிகையை அழகு படுத்தி விளங்கின. தேவியின் ஒவ்வொரு அவயவத்திற்கும், விலையேறப் பெற்ற ரத்ன ஆபரணங்கள் பூட்டப்பெற்றிருந்தன. அழகிய நீலப்பட்டாடை அணிவித்து, வளைந்தமேகலையினால், இடையில் சொருகப்பட்டிருந்தது. பாதங்களில் அழகிய பொற்சிலம்புகள் பொலிந்தன. காண்பவர் கண்களை கவர்விக்கும் வண்ணம், கருணை பொழியும் தாமரைமலர்போல் அம்பிகையின் முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அறையின் எதிர்ப்பக்கத்தில் சுவர்ணச் சட்டங்களால் சூழப்பெற்று புவனகர்த்தாவாகிய, ஏகலிங்கமூர்த்தியின் படமொன்று நீண்டமுத்துமாலைகளாலும்,பசும்பொன்னினால் சேர்த்தியாகச் செய்யப்பட்ட வில்வமாலையாலும், அலங்கரிக்கப் பட்டிருந்தன. கஸ்தூரி சாம்பிராணி, முதலியவற்றின் வாசனையால் அறைமுழுதும் தெய்வமணம் கமழ்ந்து கொண்டிருந்தன. சிறிது நேரம் நாற்காலியில் உட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருந்த பிரதாபன். திடீரென்று ஏதோ ஒரு எண்ணம் உதித்தவன்போல், கீழே இறங்கி சற்றுநேரம் அங்குமிங்கும் உலாவி விட்டு, தரையில் உட்கார்ந்தான். தான் நாற்காலியில் உட்கார்ந்து ஆனந்தமனுபவிப்பது தகாதெனக் கருதினவன் போலும் அவன் மனம் இருந்த தக்க நிலையில், வெல்வெட் நாற்காலியும் முள் செறிந்த ஆசனம் போலாயிற்று. மங்கலான தீப ஒளியிலும் அவன் மேனி பொற்கொல்லனால் உருக்கி வார்க்கப் பெற்ற வர்ணச்சிலைபோல் விளங்கியது. அவனுடைய இளமையையும் அவனுடைய இளமைக்குச் சொந்தமான எழில் நலத்தையும் துயரமென்னும் ஓர்கார்மேகம் மறைத்து களங்கமுண்டுபண்ணியது.

"மானமருங் கவரியொருமயிர் படினுமிறக்கும்" என்றபடி தன்னுடைய அருமையான சரீரத்திலிருந்து, ஓர் சிறியமயிர் வாலினின்றும் நீங்கி விட்டபோதிலும், அதனால் மானம் இழந்து விட்டதாகக் கருதி, மனம் வருந்தி உடனே உயிரைவிட்டுவிடுகிற கவரி மானைப்போல, அவன் உள்ளம் கட்டுக்கடங்காத அவமானத்தினாலும், துக்கத்தினாலும் வெதும்பிப் போயிருந்தது. "மீவார நாட்டின் அரியணையில் அன்னியன் வீற்றிருக்கும்படியாயிற்றே!" என்று அவன் பெரிதும் வருந்தினான். "என் தாய் நாடு இன்னும் சுதந்தரமின்றிதவிப்பதோ" என்று மனம் உருகினான். "அமரசிம்மனின் அழகியநாடு அக்பரின் ஆட்சிக்குதலை வணங்குவதா" என்று அவன் மனம் ஊசலாடியது. தன் மானமே உயிரெனமதித்து, விசாரக்கடலில் மூழ்கினால், பதிவிரதா சிரோண்மணிகளுடைய வயிற்றில் தோன்றிய, ரஜபுத்ர கன்னிகைகளை, துருக்கர்கள் அந்தப்புறத்தில் அடைத்துவைப்பதையும், பௌருஷசீலர்களான ரஜபுத்ரர்களில் சிலர் தன் உயர்மறையை கருதாராகி, அன்னியருடன் உறவாடி நிற்பதையும், காணும்படியான துரதிருஷ்டம் ஏற்பட்டதே என்று மனமாழ்ந்தான். தன் உயிரை ஒத்த தாய் நாடு பகைவர்களுடைய கையினால் பம்பரம்போல் ஆட்டிவைக்கப் படுவதை நினைத்து உயிர் சோர்ந்தான். செப்பரிய மனோவேதனைக்குத் தன்னை ஆட்படுத்திய பழய வினையையும், கொடிய விதியையும் நொந்தான்.

சில காலத்திற்கு முன் அவன் கண்ட அக்கனவு ஞாபகத்தில் திடீரென்று உதித்தது. கண்ணீரும் கம்பலையுமாக, தன் முன் தோன்றி காட்சியளித்து தன் துயர் கூறி மறைந்த தாயை நினைத்தான். அவன் உணர்ச்சி அவனை மீறியது. சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். பலநாளாக ஊண் உறக்கமில்லாமல் பெரிய ஏக்கத்துடன் வருந்தியதினால், அவன் உடல் மிகவும் இளைத்துத் துரும்புபோல் மெலிந்து போயிருந்தது. கண்ணீர் ஆறாகப்பெருகியது. ஸ்பஷ்டமாக வெளிப்படுத்திக்கூறமுடியாத ஓர்கொடிய குற்றத்தைச்செய்த பாவியாகதன்னைக்கருதினான். ஆண்மகனைப்போல் கத்திபிடிக்கத் தனக்குச்சிறிதும் யோக்யதை இல்லையென்று நினைத்தான். தன் முகத்தில் முளைத்த கரியமீசையும் தனக்கு உண்மையான கௌரவத்தை கொடுப்பதல்லவென்று அவனுக்கு தோன்றியது. "தாய் நாட்டை விடுதலை செய்யமுடியாதபேடியோ நான்" என்று உறுமினான் பற்களை நறநறவென ஒரு முறைகடித்தான். உறத்தெழுந்து தன் சின வாளை ஓங்கிப்பிடித்தான் என்ன செய்ய நினைத்தனனோ யாம் அறியோம்.

உடனே திடீரென்று கதவு வேகமாகதிறக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்டதைக் கண்டவுடன் அவன் கைக்கத்தி தானாக கீழேவிழுந்தது. அவனது ஆருயிர் மனைவியாகிய ராணி பத்மாவதி உள்ளே நுழைந்தனள். தனது இன்னுயிர்த் தலைவனாகிய ராணா செப்புதற்கரிய சோகத்துடன் தரையில் வீற்றிருப்பதையும், உறையிலிருந்து உருவப்பட்ட பட்டாக்கத்தி பளபளப்பாக அவன் பக்கத்தில் கிடப்பதையுங் கண்டனள். அவளுடைய மனதில் பலவேறு எண்ணங்கள் ஓர் நொடியில் உதித்தன—ஆ! நாதா! என்று கூவிக்கொண்டே அவன் பக்கத்தில் சேர்ந்தனள்.

நந்தில் கடைத்தெடுக்கப் பெற்றாலென்ன போழகையுடைய அப்பெண்ணரசி, தன் அண்டையில் வந்து நிற்பதையும் உணராதானாகி, தலைகுனிந்த வண்ணமே உட்கார்ந்திருந்தான் பிரதாபன். இரண்டு நிமிஷங்களே சென்றன, தலையை உயரத்தூக்கினான். அழகிய பட்டாடையை உடுத்து, வைர ஆபரணங்களால் நிறைக்கப்பெற்ற மேனியுடன், தன்னையே கவனித்துத் தன் மனைவி நின்றுகொண்டிருப்பதை கண்டான். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் முத்துசரம் போல் வடிந்துகொண்டிருந்தது. அழகு என்னும் தெய்வமே உருவுகொண்டனைய தன் மனைவி கண்ணீர்விட்டு நிற்பதைச்சற்றும் சகியானாகி.

பிரதாபன்:—ஆ பத்மா! நீயோ வந்தது இப்பொழுது என்? என்ன விசேடம்! யாதுகாரணத்தால் உன் அந்தப்புரம்விட்டு என்னைத்தேடி இங்கடைந்தனை என்றான். உடனே பத்மாவதி தன்கண்ணினைத்துடைத்து தன் முகத்தையும் ஒருவாறு சரிபடுத்திக்கொண்டு.

பத்மாவதி—ஆம் தங்களிடம் வந்தேன். ஒருநாளும் தங்களை இவ்வரையில் சந்திக்கும் வழக்கம் இல்லையாயினும், இன்றுயான் இங்கு வரவேண்டியது அவசியமேயாயிற்று. தாங்கள் இன்னும் போஜனம் செய்யாமலிருப்பதேன்; காலை முதல் ஒன்றும் சாப்பிடாமலும், அறையைவிட்டு புறப்படாமலும் இருந்த தாங்கள். (தொடரும்.)



## காயாரோகண வைத்தியசாலை, கும்பகோணம்.

(டாக்டர் V. P. சாமி அவர்களால் மிக்க திறமையுடன் நடத்தப் பெறுவது)

சித்தர்களுடைய உயர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி பல நூற்றாண்டுகளாகக் கையாளப்படும் சிறந்த சுதேசவைத்தியசாலை. ஆராய்ச்சியும் அனுபவமும் கீர்த்தியும் வாய்ந்த அறியதோர் வைத்திய தர்மத்தினால் சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்குத் தருமவைத்தியம் செய்யப்படும். மாதந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் பிணி நீங்கி, வாயார வாழ்த்திச் செல்கின்றனர். மலபந்தம், அஜீரணம், ஜுரம், காசம், முதலிய நோய்களுக்கும்; குஷ்டம், குன்மம், முதலிய மகாரோகங்களுக்கும் ஆச்சரியப்படும்படி மிக்க சுலபமாகச் சிகிச்சை செய்து நிவர்த்திக்கப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி, காமாலை, முதலிய கொடிய வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நமது வைத்தியசாலை அழியாப்புகழ் பெற்றிருக்கின்றது. ஏழைகளுடையவும், பிணியாளிகளுடையவும், நன்மையையே கருதி நடத்தப்படும் உயர்ந்த சுதேச வைத்திய ஸ்தாபனம் இதுவே. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், காயாரோகண வைத்தியசாலை,
காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம்.

# Krishna Chalk works,

*PANCHASHARA AGRAHARAM,*
KUMBAKONAM.

சுதேச கைத்தொழிலை ஆதரியுங்கள்.

இந்த வொர்க்ஸில் ஸ்கூல்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டியவெள்ளைச் சாக்பீஸ்களும் கலர்ச் சாக்பீஸ்களும் (Dry) டிரை கலர் பாக்ஸ்களும் ஆயில் கலர் பாக்ஸ்களும் சிலேட் பென்ஸல்களும் மிக நேர்த்தியாக யந்திரங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டு வருகிறது. காலேஜ், ஹைஸ்கூல், போர்ட்ஸ்கூல், முனிசிபல் ஸ்கூல், பிரைமெரி ஸ்கூல் முதலிய பல கல்வி ஸ்தாபனங்களுக்குச் சப்ளை செய்து நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

அயல்நாட்டுச் சரக்குகளைவிட மேலானது. கூடிய சீக்கிரத்தில் குரூஸிபிள்ஸ்களும் (குகைகள்) பிளாக்லெட் பென்ஸல்களும் காப்பியிங் பென்ஸல்களும் நல்ல தினுசாகத் தயார் செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை/ வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விலை விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

## கிருஷ்ண சாக் வொர்க்ஸ்,

பஞ்சாக்ஷர அக்கிரஹாரம்,
கும்பகோணம்.

நம் சகோதரர்களே! வியாபாரிகளே!!
விளம்பரம்செய்வோர்களே!!!

# திராவிடன்

நம் தமிழ் நாட்டார்
முன்னேற்றத்திற்காகவே
வெளிவந்துலாவும்

## தினசரிப் பத்திரிகை.

அரசர்முதல் சாமானிய விவசாயிவரை, செல்வவான் முதல் ஏழைவரை, சாதி வகுப்பு பேதமின்றி யாவரும் வாசித்து வருவது நம் பத்திரிகையையே.

தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டார் குடியேறியிருக்கும் வெளிநாடுகள்தோறும் பரவி வருகிறது.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிப் பணம் சம்பாதிக்க ஏற்றபத்திரிகை இதுவே.

மானேஜர்:—
திராவிடன்'
போஸ்டு பாக்ஸ் நெ. 760,
எழும்பூர், மதருஸ்.

---

## "தெய்வ பக்தன்,,

மாதம் இருமுறை வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.

தமிழ் நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்ம ஸ்தாபனங்கள் இவற்றால் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளேயும் அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களேயும், பிற அறிவு வளர்ச்சிக்கும், செல்வ விருத்திக்கும் உற்ற செய்திகளேப் பற்றி பல அறிவாளிகள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வோரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறுதிருக்கவேண்டிய ஒரு சிறந்த பத்திரிகையாகும்.

வருஷ சந்தா ரூ. 3.
மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

---

## T. S. கணபதி சாஸ்திரிகளின்
## ஆயுர்வேத ஔஷதங்கள்.

மகா பில்வாதி முதலான லேஹ்யங்கள், தைல வகைகள், பஸ்ம செந்தூரங்கள், ரஸாயனங்கள், இருதங்கள் முதலிய மருந்துகள் இவ்விடத்தில் சாஸ்திரீயமாக செய்யக்கூடியதும் இவ்விடத்தில் பச்சிலை மூலிகைகள் அகப்படாததற்கு மலேயாளமிருந்துவரவழைக்கப்பட்டுச் செய்ததுமான மருந்துகளே ஆஸ்திகர்களாயுள்ள நம் நாட்டு பிரமுகர்கள் ஒரு தடவை வாங்கிஉபயோகித்தால் அதன் உண்மை விளங்கும். (விலை முதலிய மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்குஎழுதவும்)

விலாசம்,
T. S. கணபதி சாஸ்திரிகள்,
3, லெக்ஷ்மி விலாஸ் அக்ரஹாரம், கும்பகோணம்.

---

## ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சோத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர் துத்தல், நீர் எரிச்சல், வெட்டை, புண், வயறு கடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு. இவைகளுக்கு ஆட்டுப்பால்அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக்கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகப் படுத்தக் கூடிய
டப்பி 1-க்கு அணு 0—4—0

அஷ்டகுல்ம
ஸர்வரோக நிவாரணயௌவனலேகியம்

குல்மம் முதலான சகல ரோகங்களேயும் கண்டித்து சரீரத்தை பெலப்படுத்தி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடியது. பத்தியமில்லை.

இதன் விலை சேர் 1-க்கு ரூ. 4—0—0

நேத்ரானந்த தைலம்.

கண் எரிச்சல், கண்புகைச்சல், கண்மறைவு மண்டைக்குத்தல், சொரிசிரங்கு, இவைகள் சௌக்கியமாகும். கிராம் சேர் 1-க்கு ரூ. 4—0—0

குறிப்பு:—காசரோகம், குஷ்டம், முதலிய மகாவியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பானு அண்டு ஸன்ஸ்,
எலந்துரை, திருவிடமருதூர் போஸ்டு.



## சிற்றின்ப சாஸ்திரம்.

பிரசித்தி பெற்ற அருமையான இந்நூலில் ஸ்திரீ புருஷர், இவ்வுலகில் அனுபவிக்க வேண்டிய சிற்றின்ப ரகசியங்கள், ஸ்திரீகளின் பருவப்பெயர்கள், புருஷர்களின் பருவப் பெயர்களும், மானிட இன்பங்களில் 55ம் இதில் ததும்பிக் கிடக்கின்றன.

புத்தகம் 1-க்கு வி. பி. சார்ஜ் உள்பட விலை ரூ. 1.
எம், லீலா அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை, மதராஸ்,

---

## தேசீய ராஜீய
## சரித்திர நூல்கள்.

ஸ்ரீமான் எம்.எஸ்.சுப்பிரமணியஐயர் எழுதியவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ரஜபுத்திர வீரர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| 2. | ஆரிய சரித்திரம் | 1 | 0 | 0 |
| 3. | மகாத்மா காந்தி சரிதம் | 0 | 8 | 0 |
| 4. | ஒத்துழையாமை சரித்திரம் | 0 | 4 | 0 |
| 5. | இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 | 0 |
| 6. | ஐசுவரிய சக்கரம் | 0 | 8 | 0 |
| 7. | திருக்குறள் நீதிக்கதைகள் | 0 | 6 | 0 |

இவையும் இன்னும் பல அரிய புத்தகங்களும் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

மயில் வாகன் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்.
ஐயப்பசெட்டித்தெரு, மண்ணடி, மதறாஸ்.

---

## கற்பகம்.

ஒரு செந்தமிழ் மாதச் சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருவது.

வருஷ சந்தா உள் நாட்டிற்கு ரூ. 1—0—0
,, வெளி நாட்டிற்கு ,, 1—[illegible]—0
[illegible]னேஜர்:— "கற்பகம்" புதுவை.

---

## லோகமான்ய திலகர்.

பிறந்ததுமுதல் இறந்தது வரை முழு விவரத்துடன் ஸ்ரீயுத கிருஷ்ணசுவாமி சர்மா எழுதியது. கீதாரகசியம், காந்தி-திலகர் சம்வாதம், திலகர் ராஜீயக்கொள்கை, விசாரணைகள், நித்திய வாழ்க்கை முதலிய பலவிஷயங்கள் 16 அத்தியாயங்களில் காணலாம்.

300 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—8—0.

## தேசாபிமானத்தையூட்டும் நூல்கள்,

ஸ்ரீயுத கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| மகாத்மா காந்தியடிகள் | 1 | 8 | 0 |
| அலி சகோதரர்கள் | 1 | 0 | 0 |
| டால்ஸ்டாய் ருஷ்யஞானி | 0 | 4 | 0 |
| சிவாஜி மகாராஜா | 1 | 0 | 0 |
| இந்தியா இழந்த தனம் | 1 | 0 | 0 |
| இராஜரீக சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| இராஜராஜ சோழன் | 0 | 10 | 0 |
| அசோக சக்கரவர்த்தி | 0 | 8 | 0 |
| நெபோலியன் 1 8 0 பண்டிதநேரு | 0 | 2 | 0 |
| கும்பமகாராணு 0 6 0 ஆத்மசக்தி | 0 | 10 | 0 |

மானேஜர், கிராமானுகூலன், கும்பகோணம்.

---

## சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும் வெளிவரும்
ஓர் தமிழ்ப்பத்திரிகை.

சென்ற 7 வருஷகாலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம். கைத்தொழில் வியாபாரம் முதலிய செல்வவிருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலியவிவசாயங்களுடன் தத்காலப் போக்கை அனுசரித்து "சுதந்திரன்" என்னும் பெயருடன் 4 வருஷ காலமாகஇராஜீய விஷயங்கள், மகாத்மா காந்தியவர்களின் உபதேசம், இந்தியா முன்னேற்ற மார்க்க விபரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளி வருகின்றன. சுயராஜ்யமடைய விரும்புவோர் யாவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்யமடைந்து சுகஜீவிகளாகவேண்டும்.

வருஷசந்தா இந்தியாவிற்கு ரூ. 6—0—0.
சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

23 223466 31 NV 27 07

உ

அழகும் பெருமையும் அமையப்பெற்றது.

பாரதமாதா பாதம் துணையாகும்.

பொருளும், திருளும் பொருந்த உற்றது.

# பாரதி வெள்ளி பவுண்டன் பேனு.

**ஐயன்மீர்!**

நமது தாய்நாட்டின் கல்வியும், செல்வமும் கைத்தொழிலும் பண்டுள நிலைக்குன்றினதாகி இருந்த இவ்விடமெனில் மறைந்திடுமோவென ஏக்கமுற்ற இக்காலத்தில் நம் சகோதரர்களிற் பலர் தூக்கம் விடுத்து, ஊக்கமடைந்து, பற்பல துறைகளிலும் முற்பட்டு முயன்றுவருவது வெளிப்படை.

ஆகவே, தாய்நாட்டின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்வோமானல், அதனல் பொருளாதாரம் நிலைபெருமென்பது துணிபாம்.

எனவே, ஓர்விதசேர்க்கை அறக்கினல் அன்னிய நாட்டிலிருந்து செய்தனுப்பும் பவுண்டன் பேனவை நம்மில் பலரும் வாங்கி உபயோகிப்பதை எண்ணி நம் நாட்டில் மிக்க கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு நல்ல வெள்ளியினல் மிக அழகாக பவுண்டன்பேன செய்து “பாரதி” என்னும் விலாசமிட்டுப் பவுன் நிப்புடன் இரிடியம் துவைத்தது குறைந்தவிலைக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

நீண்டநாள் இந்தப் பேனவை உபயோகித்தபின் நசுங்கியோ மற்ற எந்தவிதத்தினலும் கெட்டுவிட்டாலும், மற்ற அன்னிய நாட்டு அறக்கு பேனக்களைப்போல் எறிந்துவிடக் கூடியதல்ல! அப்போது அதிலுள்ள வெள்ளி, பொன் தங்களுக்கு லாபகரமாகக் கிடைக்கும்.

இதை ஒருமுறை வாங்கி உபயோகிக்கும் சகோதரர்கள் மறுமுறை இதைத்தவிர வேறு பேனக்களை வாங்கமாட்டார்களென்பது திண்ணம். ஆகையால் ஆர்டருக்கு முந்துங்கள்!

| | | | ரூ அ பை |
|---|---|---|---|
| பூரா | வெள்ளி 14ct | தங்கநிப் இரிடியம் துவைத்தது [illegible]போடும் குழாய் பெட்டியுடன் | 10—8-0 |
| | வெள்ளி | தனி நடுபாகம் (Barrel) | 3—0—0 |
| | ” | தனி முன்பாகம் (Mouth piece) | 3—0—0 |
| | ” | தனி மூடி (Cap) | 2—0—0 |
| | ” | தனி பீடர் (Feed Bar) | 1—0—0 |
| | ” | தனி 14ct தங்கநிப் இரிடியம் துவைத்தது | 2-12—0 |
| | ” | ஷை இரிடியம் துவைக்காதது | I-12—0 |
| | ” | தனிகிளிப் (Clip) | 1—4—0 |

படிக்கு,

தங்களன்புள்ள ஆர்டரை எதிர்பார்க்கும்:—

**K. G. R. & Co.,**

திருவாரூர்.

## ரத் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி,

லிமிடெட், ஹெட் ஆபீஸ், லாகூர்.

1896ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

:x;

**(Four Fold Benifit scheme a speciality.)**

நான்குவித லாபங்கள் தரக்கூடிய விசேஷ பாலிஸிகள் கொடுக்கப்படும்.
மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பிராஞ்சு செக்ரிடரி,
மதுரை.

N. S. வெங்கிடாச்சாரி,
சீப் ஏஜண்டு, காவேரிக்கரைத்தெரு, கும்பகோணம்.



## வியாபாரிகளே!

## இந்த பத்திரிகையில் விளம்பரம் சய்வதினால் விசேஷ லாபமுண்டு.

## நீடித்த விளம்பரங்களுக்கு மிகவும் குறைந்த சார்ஜ்.

## உடனே எழுதவும்.

புரோப்ரைட்டர்,
கிராமானுகூலன்,
கும்பகோணம்.

மணத்தின் ஊற்று! வாசனையின் வித்து!!

# பரிமளப் பொக்கிஷம்

எது?

கும்பகோணம் பெரியகடை வீதி

## K. அப்துல்ரகிமான் சாஹிப் & சன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அநுபவம் வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. எமது பரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அநுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். [illegible]ள்ள சகல பரிமளச்சாமான்களும் [illegible]னிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அநு[illegible]த்திபெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை [illegible]ணர்பிரானுக்கும் பரிமளப் [illegible]ருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே [illegible] இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [கேட்லாக் இனாம்]

கவனியுங்கள்! போலி சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள்!!

# தென்னிந்தியா நெசவுசாலை,

## கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறுக்கள் ஷை நெசவு சாலையில் தயாராகின்றன. மேற்கண்ட **S. R. S.** டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், **S. R. S.** டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

**S. R.** சுந்தரமய்யர்,
புரோப்ரைட்டர்.

Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiye